பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 15 திங்கட்கிழமை 27.02.2023 கதிர் 110

**இனிது ரகசியம் அல்ல!**

திடீரென மகிந்தவை பிரதமர் பதவிக்கு மீண்டும் கொண்டு வருவது தொடர்பான பேச்சுக்கள் தொடங்கியிருக்கின்றன. தற்போதைய பிரதமர் தினேஸ் குணவர்த்தனவை அந்தப் பதவியில் இருந்து அகற்றிவிட்டு மகிந்தவை அந்த ☞ 2



# இந்த அரசால் எம்மை அடக்கிவிட முடியாது

## அலையெனத் திரண்டிருந்த மக்கள் முன் கொழும்பு ஆர்ப்பாட்டத்தில் அநுர சூளுரை



உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிற்போடுவதன் மூலம் தேசிய மக்கள் சக்தியின் எழுச்சியை - ஒட்டுமொத்த நாட்டு மக்களின் எழுச்சியைக் கட்டுப்படுத்தலாம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு நினைக்கக்கூடாது. இந்த அரசால் எங்களை அடக்கிவிடவே முடியாது.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். ☞ 2

## போராட்டக்காரர்கள் 28 பேருக்குக் காயம்

கொழும்பில் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியின் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலின் போது 28 பேர் ☞ 2

## இரண்டு புதிய சட்டங்கள் மூலம் தேர்தல் மேலும் பிற்போடப்படும்

உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்காக இரண்டு சட்டமூலங்களைக் கொண்டு வருவதற்கு அரசு ☞ 2

### இந்திய மீன்பிடி படகுகளுக்கு இலங்கைக் கடலில் அனுமதி

## பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி இடம்பெறும் ஒரு பெரும் வளச் சுரண்டல்

### எதிர்ப்பு பலமாக இருக்கவேண்டும் என பல்கலை விரிவுரையாளர் எச்சரிக்கை

(ந.லோகதயாளன்)

இலங்கையின் கடல் எல்லைக்குள் இந்தியப் படகுகளுக்கு மீன்பிடிக்க அனுமதி வழங்குவது என்பது இந்திய ட்ரோலர்களிடம் இலங்கை அரசு சரணடைந்து விட்டது. இது இலங்கையின் பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி இடம்பெறும் ஒரு வளச் சுரண்டல்.

இவ்வாறு சுட்டிக்காட்டினார் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் அகிலன் கதிர்காமர். இந்திய மீனவர்களுக்கு இலங்கைக் கடல் எல்லைக்குள் மீன்பிடிக்க ☞ 2

### போராட்டக்காரர்கள் மீதான தாக்குதலுக்கு

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கடும் கண்டனம்



தேர்தலை வலியுறுத்திக் கொழும்பில் நேற்று தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் மீது பொலிஸாரால் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரைத் தாக்குதல் நடத்தப்பட்டதை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான ☞ 12

## உழவு இயந்திரக் கலப்பையில் சிக்கி இளைஞர் பரிதாபச் சாவு

திருகோணமலை – தோப்பூர் பகுதியில் உழவு இயந்திர கலப்பையில் சிக்கி நசியுண்டு இளைஞர் ஒருவர் சனிக்கிழமை உயிரிழந்தார்.

தோப்பூர் – செல்வநகர் பகுதியைச் சேர்ந்த இளைஞரே ☞ 12

## ஊர்காவற்றுறையில் நிகழ்ந்தது பட்டினிச் சாவு

யாழ்ப்பாணம், பெப்.27

ஊர்காவற்றுறையில் தனித்திருந்த இரு வயோதிபப் பெண்கள் உடல் கருகி உயிரிழந்த சம்பவத்தில் ☞ 12

## மீண்டும் மின்வெட்டு அடுத்த மாதம் வரலாம்

நாட்டில் மீண்டும் மின்வெட்டு ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மின்சார பொறியியலாளர்கள் இந்தச் சந்தேகத்தை வெளியிடுகின்றனர்.

மின்வெட்டு இனி இடம்பெறாது என்று ☞ 12

## 'மே 9' கலவர அறிக்கையில் சிக்கிய ஜெனரல் சவேந்திர

### சி.ஐ.டி. விசாரணைக்கும் சிபாரிசு



2022ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற கலவரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அந்நேரம் இராணுவத் தளபதியாகவும் பாதுகாப்புப் படைகளின் பதில் ☞ 12

## மே 9 கலவரத்தில் 18 பஸ்கள் சேதம்

கடந்த வருடம் மே மாதம் 9 ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற கலவரம் காரணமாக இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான 18 பஸ்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளன. இதனால் ☞ 12

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடத்திற்குக் கொண்டு வருவதற்கான முயற்சி பற்றி மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார். ஆனால் அத்தகைய முயற்சிகள் எதுவும் இல்லை என்றும் பதவி விலகும்படியான கோரிக்கையோ நெருக்கீடுகளோ தனக்குத் தரப்படவில்லை என்றும் பிரதமர் தினேஸ் விளக்கியுள்ளார்.

இதற்கிடையில் கண்டியில் ஓரிரு தினங்களுக்கு முன்னர் செய்தியாளர்கள் முன் பேசிய மகிந்த ராஜபக்ஷ, தேர்தலை நடத்துவதில்லை என்கிற ஜனாதிபதியின் முடிவுக்கு எதிராகவும் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு எதிராகவும் திடீரெனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இந்த இரு விவகாரங்களும் மொட்டந்தலையும் முழங்காலும் போன்றதாக இருந்தாலும் இரண்டும் இடையிலான முடிச்சுப் பலமானது என்கிறது கொழும்பு அரசு. மொட்டுக் கட்சியின் இந்த அதிருப்தி வெளிப்பாடுகளுக்கான பின்னணிக் காரணம், ஜனாதிபதிப் பதவிக்கு வருமபோது, மொட்டுக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு அமைச்சுப் பதவிகள் விரைவில் வழங்கப்படும் என்று ரணில் உறுதியளித்திருந்தார். அதனை அவர் இன்னும் நிறைவேற்றவில்லை.

அமைச்சரவை மாற்றம் தொடர்பில் கதைகள் அடிபட்டாலும் அதனைச் செய்வதில் ரணில் பெரியளவில் ஆர்வத்தைக் காட்டவில்லை என்பதுதான் மொட்டுவின் தற்போதைய கோபத்துக்குக் காரணம். அவர்கள் இது தொடர்பில் ஏற்கனவே இரண்டு வார கால அவகாசம் கொடுத்திருக்கிறார்கள். அப்படியும் எந்த அசுமாத்தத்தையும் ஜனாதிபதி பக்கத்தில் இருந்து காணவில்லை என்பதால்தான், அவருக்கு நெருக்கடிகளைக் கொடுக்கக்கூடிய கருத்துக்களைக் கட்டவிழ்க்கத் தொடங்கியிருக்கிறது மொட்டு என்கின்றன உள்வீட்டுத் தகவல்கள்.

********

ஜேவிபி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி நேற்றுக் கொழும்பில் பெரும் போராட்டம் ஒன்றை நடத்தியது. பெரும் எண்ணிக்கையில் திரண்டு வந்த கூட்டம் அந்தக் கட்சிக்குப் பெருகி வரும் ஆதரவைப் பறை சாற்றுவதாக இருந்தது. களத்தில் மொட்டு வாடிப் போயும் யானை எழும்ப முடியாதளவிற்கு நிலத்தில் படுத்தும் கிடக்கும் நிலையில் ஜேவிபிக்குத்தான் அலையடிக்கிறது என்கிற கருத்துக் கருத்துக்கணிப்பையும் வாசகர்களுக்குச் சொல்லியிருக்கின்றேன். ஞாபகமிருக்கும்.

நேற்றைய சனத் திரளைப் பார்த்ததும் கொழும்பில் இருக்கும் நண்பருக்கு அழைப்பெடுத்து, கூட்டத்தைப் பார்த்தால் ஜேவிபிக்கு இம்முறை வரலாற்றில் இல்லாத வெற்றி கிடைக்கும்போல இருக்கிறதே என்று கேட்டேன். அவரோ காஸுவலாக, இது அரசு மீது இருக்கும் கோபத்தால் திரளும் கூட்டம். இதெல்லாம் வாக்குகளாக வரும் என்று சொல்லிவிட முடியாது. இதற்கு முன்னரும் ஜேவிபியின் கூட்டங்களுக்கு, போராட்டங்களுக்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகம்தான். அவர்களுக்கு மக்களைத் திரட்டிக் கொண்டுவருவதற்கான சூக்குமம் தெரிந்திருக்கிறது. அதை வைத்து மட்டும் தேர்தலில் அவர்கள் வெற்றிபெறுவார்கள் என்று சொல்லிவிட முடியாது என்றார்.

அதற்கு அவர் ஒரு உதாரணமும் சொன்னார். கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் ஜேவிபி நிறுத்தியிருப்பது ஒரு பெண் வேட்பாளரை. கட்சியோ அடிப்படையில் பொதுவுடமையை அதாவது சோசலிசத்தைப் பேசும் கட்சி. இந்த நெருக்கடியான காலத்தில் மக்களுக்கு நெருக்கமாகத் தான் தானும் இருக்கிறார் என்று காட்ட ஜேவிபியின் மாநகர சபை வேட்பாளர் அண்மையில் ஒரு நேர்காணலில் பேசப்போக சமூக ஊடகங்களில் வேறு விதமாகத் திரிக்கப்பட்டு கழுவி ஊற்றிவிட்டார்கள்.

கொழும்பு மேயர் வேட்பாளர் கூறியது இதுதான். கடந்த மூன்றரை ஆண்டகளாக எனது குழந்தைகளுக்கு நான் எந்த ஆடைகளையும் வாங்கவில்லை. கடந்த ஒரு வருடத்தில் எனக்கென ஒரே ஒரு ரவிக்கை மட்டும்தான் வாங்கியிருக்கின்றேன். தானும் தனது குழந்தைகளும் நண்பர்களின் உடைகளை மாற்றிக்கொண்டுதான் இந்த மூன்று வருட காலத்தைச் சமாளித்து வருகின்றார்கள் என்றும் அந்தப் பேட்டியில் அவர் சொன்னார்.

பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்பு எவ்வளவு தூரம் குடும்பங்களைப் பாதிக்கின்றது என்பதை விளக்கும் நல்லெண்ணத்துடன்தான் அவர் இதனைக் கூறினார் என்றாலும் சமூக ஊடங்கள் வழக்கம்போல அதனை திரித்து திசை திருப்பி வேட்பாளரை ஒரு கோமாளியாக்கி வைத்துவிட்டன. இதுபோன்றே ஜேவிபி என்னதான் கடுமையாக முயன்றாலும் மற்றவர்கள் அதனை இலகுவாக ஒரு வழி பண்ணி ஒதுக்கி விடுவார்கள் என்றார் அந்த நண்பர்.

எனக்கென்னவோ இந்தமுறை அதையும் தாண்டி ஒரு மாற்றம் நிகழும் போலவேபடுகிறது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் வாசகர்களே!

- இடிமின்னல் -

## இந்த அரசால் எம்மை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
'தேர்தலைப் பிற்போடுகின்ற சூழ்ச்சிக்கு எதிரான எதிர்ப்பு' என்ற தொனிப்பொருளில் கொழும்பில் நேற்று அரசுக்கு எதிராகப் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனநாயக உரிமையான வாக்குரிமையை மக்களிடமிருந்து ரணில் விக்கிரமசிங்க பறித்தெடுத்துள்ளார். நாட்டில் வாழும் அனைத்து மக்கள் முன்னிலையிலும் அவர் இன்று செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எமக்கு வடக்கா, கிழக்கா, தெற்கா, மேற்கா என்று எவ்வித பிரச்சினையும் இல்லை.

எவ்வித பேதமும் இன்றி மக்கள் முன்னிலையில் எம்மால் செல்லமுடியும். மக்களை ஒன்றுதிரட்டவும் எம்மால் முடியும். ரணில் அரசால் இதைச் செய்ய முடியுமா?

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்று 8 மாதங்கள் நிறைவடைந்துள்ளன. இந்தக் காலப்பகுதியில் நூறு மக்களையாவது திரட்டி ஏதாவது ஒரு கூட்டத்தை அவர் நடத்தினரா?

ரணில் விக்கிரமசிங்கவுக்கு இன்று நாட்டின் அனைத்துப் பகுதிகளும் தடை செய்யப்பட்ட பூமியாகிவிட்டது. நாட்டினதும் மக்களினதும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவரால் முடியாது – என்றார்.

முன்னதாக தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற போராட்டத்தில் பல லட்சக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர். பிற்பகல் 2.30 மணியளவில் புறப்பட்ட பேரணி விகாரமாதேவி பூங்காவிலிருந்து நகர மண்டபத்தை (டவுன் கோல்) நோக்கி முன்னேறியது. கொழும்பு – இப்பன்வல சந்திக்கருகில் அதனை பொலிஸார் அதனை வழிமறித்தனர். பொலிஸாருடன் நீண்ட நேரம் வாக்குவாதப்பட்ட பின்னர் பொலிஸ் அரணைத் தகர்த்து பேரணி முன்னேறியது. இதையடுத்து போராட்டக்காரர்கள் மீது நீர்த்தாரை தாக்குதலைத் தொடங்கிய பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சையும் நடத்தினர்.

இதனால் சிதறி ஓடிய போராட்டக்காரர்கள் சற்று நேரத்தில் சுற்றுவட்டப் பகுதியில் மீளக்கூடி அங்கேயே பொதுக் கூட்டத்தையும் நடத்தினர். மக்கள் சக்தித் தலைவர் அனுரகுமார திஸநாயக்க அந்தக் கூட்டத்தில் உரையாற்றினார்.

## போராட்டக்காரர்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துமாறு கோரி தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

இதனால், கொழும்பு தாமரைத் தடாகம் முதல் நகர மண்டபம் வரையான வீதியில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

இந்த நிலையில், ஆர்ப்பாட்டத்தை கலைக்கப் பொலிஸாரால் நீர்த்தாரைப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது காயமடைந்த 28 பேரே கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## இரண்டு புதிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தீர்மானித்துள்ளது என்று அறியமுடிகின்றது.

அதில் ஒன்று உள்ளூராட்சி சபைகளில் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை 25 வீதத்தால் அதிகரித்தல். அடுத்தது 8 ஆயிரமாக இருக்கின்ற உறுப்பினர்களை 5 ஆயிரமாகக் குறைத்தல்.

இந்தச் சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டால் தேர்தல் மேலும் ஒத்திப்போடப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## பொருளாதார .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அனுமதி வழங்குவதை எப்படி எதிர்ப்பது என்பது தொடர்பில் வடக்கில் உள்ள மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பிள்ளையார் இன் விடுதியில் கூடி ஆராய்ந்த கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக ஆராயப்படுவதாக அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார். இது சாதாரணமாக விடயமல்ல. இந்திய அயலுறவுத் துறை அமைச்சர் இலங்கை வந்த போதே இது தொடர்பில் பேசி முடிவெடுக்கப்பட்டுவிட்டது என்பதும் அதிகாரிகள் மட்டத்தில் இது தொடர்பான நடவடிக்கைகள் ஏற்கனவே இடம்பெற்றுவருகின்றன என்பதும் அவரது உரையில் இருந்து ஆணித்தரமாகத் தெரிகின்றது. எனவே வெளிவிவகார அமைச்சரின் கூற்றுக்கு எதிராக வடக்கு மீனவர்கள் தனது உறுதியான, தெளிவான மறுப்பை, கண்டனத்தை, எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும்.

வடக்கு மாகாண மீனவர்கள் இதற்கு எதிராக கிளர்ந்தெழாமல் விட்டால் அது பெரும் ஆபத்தை ஏற்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

மீனவர் பிரச்சினை தொடர்பில் 2016ஆம் ஆண்டு இலங்கை – இந்திய அரசுகளுக்கு இடையில் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அப்போது நான் அயலுறவுத்துறை அமைச்சின் ஆலோசகராக இருந்தேன். அந்த ஒப்பந்தத்தை வரைவதில் எனது பங்களிப்பும் இருந்தது. அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டதிலிருந்து பார்த்தால் தற்போது அரசு எடுத்துள்ள முடிவு இந்த விடயத்தில் இலங்கைத் தரப்புக்குக் கிடைத்த மிக மோசமான பின்னடைவு என்றே சொல்வேன்.

2016ஆம் ஆண்டளவில் இந்தப் பிரச்சினையில் இரு நாட்டு அரசுகளும் பேசினால் மட்டுமே இதற்குத் தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அரசுகளை மட்டும் பேச விட்டாலும் அது மீனவர்களிற்கு எதிரானதாகவே அமையும். அதனால் மீனவர் பிரதிநிதிகளையும் உள்ளடக்கவேண்டும் என்று கருத்தியே புதுடில்லியில் அது தொடர்பான பேச்சுக்களில் மீனவர் பிரதிநிதிகளையும் உள்ளடக்கினோம்.

2016 ஒப்பந்தத்தின்படி இந்தியாவில் இழுவைமடித் தொழிலைத் தடை செய்வதற்கு இணக்கம் காணப்பட்டதுடன் மீனவர்களுக்கு மாற்றுத் தொழில் வசதிகளை ஏற்படுத்துவதற்குப் பெருந்தொகை நிதியை ஒதுக்குவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. அப்படிப் பார்க்கும்போது இது மிகப் பெரிய பின்னடைவு, எமது மீனவர்களுக்குக் கடும் பாதிப்பு.

இப்போது எதிர்ப்புத் தெரிவிப்பதன் மூலம் இனி இந்தப் ஒப்பந்தம் பின்னோக்கிச் செல்வதற்கான வாய்ப்புக்கள் குறைவு. ஆனால் பாதிப்புக்களைக் குறைப்பதற்கு முயற்சிக்கலாம். ஒப்பந்தம் கையெழுத்திடப்படுவதற்கு முன்னர் அதில் எமது மீனவர்களின் நலன்களை உள்ளடக்கக்கூடிய திருத்தங்களை உட்புகுத்த முயற்சிக்கலாம்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை பயன்படுத்தி இடம்பெறும் ஒரு வளச் சுரண்டல் இது. இந்த நடவடிக்கையானது இந்திய ட்ரோலர் படகுகளிடம் இலங்கை அரசு சரண்டைந்தமைக்கு ஒப்பானது.

இதற்கு எதிரான முதலும் உறுதியுமான எதிர்ப்பு மீனவர் சமூகங்களிடமிருந்தே வரவேண்டும். அப்போதுதான்

(12ஆம் பக்கம் பார்க்க)



காலைக்கதிர்
Kalaikkathir

# நாட்டில் இனவாதத்தைத் தூண்டி நல்லிணக்கத்தை சீர்குலைப்பவர்களுக்கு எமது ஆட்சியில் தண்டனை!

## முல்லைத்தீவில் சஜித் தெரிவிப்பு



நாட்டில் இன, மதவாதங்களை ஏற்படுத்தி நல்லிணக்கத்தை சீர்குழைக்கும் அனைவருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். நாடாளுமன்றத்தில் நாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்காமல் தேர்தலை நடத்துவதற்கான நிதியை வழங்குமாறு ஜனாதிபதியை வலியுறுத்துவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

முல்லைத்தீவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ராஜபக்ஷ ஆட்சி காலத்தில் வடக்கின் வசந்தம் எனக் கூறினர். ஆனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நான் வடக்கின் வசந்தத்தை அவதானிக்கவில்லை.

வடக்கிற்கும், தெற்கிற்கும் முழு நாட்டுக்கும் ராஜபக்ஷக்கள் வழங்கிய பரிசுப்பொதி இனவாதமும், இனபேதமும், மதவாதமும், மதபேதமும் வங்குரோத்தடைந்த இலங்கையுமாகும்.

ஒவ்வொருவரும் தாமே தேசப்பற்றுடையவர்கள் எனக் கூறிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அனைவரும் ஒரே சேற்றில் தான் புரண்டு கொண்டிருக்கின்றனர். யுத்தம் நிறைவடைந்துள்ள போதிலும், நல்லிணக்கம் என்ற சொற்பதம் தீய சொல்லாகவே பார்க்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இன, மதவாதங்களைத் தூண்டும் அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்குவோம்.

நான் கூறும் இந்த விடயம் அனைத்து இனங்களுக்கும் பொதுவானதாகும். யானை, காகம், மொட்டு அரசாங்கத்தில் நாட்டில் தேர்தல் இல்லை என்று ஜனாதிபதி கூறுகின்றார்.

அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மக்களின் வாக்களிக்கும் உரிமையில் எவராலும் கை வைக்க முடியாது. அதே நிறைவேற்றதிகார ஜனாதிபதிக்கும் அந்த அதிகாரம் கிடையாது. நாடாளுமன்றத்தில்முன்மொழியப்பட்டமைக்காகதேர்தல்ஆணைக்குழுவை மாற்ற முடியுமா?

வேட்புமனு தாக்கல் இடம்பெற்று, தேர்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் தேர்தல் காலம் தாழ்த்தப்பட்டுள்ளமைக்காக ஆணைக்குழுவின் உறுப்பினர்களை மாற்றுவதற்கும் எவருக்கும் அதிகாரம் கிடையாது.

எனவே, நாடாளுமன்றத்தில் நாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்காமல் தேர்தலை நடத்துவதற்கான நிதியை வழங்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்துகின்றோம். சதித்திட்டங்கள் ஊடாக மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் சகலருக்கும் எமது ஆட்சியில் நிச்சயம் தண்டனை வழங்கப்படும். – என்றார்.

# சிறந்த தேயிலை கொழுந்து பறிப்பாளராக சீதையம்மா




ஹேலிஸ் பெருந்தோட்ட நிறுவனத்தின்கீழ் பணியாற்றும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுள், சிறந்த கொழுந்து பறிப்பாளரை தெரிவுசெய்வதற்கான இறுதி போட்டி நானுஓயா – ரதல்ல, தேயிலை மலையில் நேற்று (சனிக்கிழமை) நடைபெற்றது.

ஹொரண, தலவாக்கலை மற்றும் கெலனிவெலி பெருந்தோட்ட நிறுவனங்களில் கீழ் உள்ள 60 தோட்டங்களில் ஆரம்பக்கட்ட போட்டிகள் நடைபெற்று, அவற்றில் வெற்றிபெற்றவர்களில் இருந்து 42 பெண் தொழிலாளர்கள் இறுதிப் போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

20 நிமிடங்கள் வழங்கப்பட்டு, இக்காலப்பகுதிக்குள் கூடுதல் கொழுந்து பறிப்பவர் வெற்றியாளராகத் தெரிவு செய்யப்படுவார் என அறிவிக்கப்பட்டது.

இந்தப் போட்டியில் தலவாக்கலை, பெருந்தோட்ட நிறுவத்தின் சமர்செட் பிரிவைச் சேர்ந்த ஆர்.சீதையம்மா முதலிடம் பிடித்தார். 20 நிமிடங்களுக்குள் 10 கிலோ, 450 கிராம் கொழுந்தை அவர் பறித்திருந்தார். 37 வயதான மூன்று பிள்ளைகளின் தாயான அவருக்கு 3 லட்சம் ரூபா பணப்பரிசும், தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டது.

இந்த போட்டி நிகழ்விற்கு பிரதம அதிதியாக ஹேலிஸ் நிறுவனத்தின் தலைவர் மொகான் பண்டித்தகே, ஹேலிஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் டாக்டர் ரொான் ராஜதுரை, உட்பட நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் தோட்ட முகாமையாளர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வலுவான எதிர்ப்பைக் காட்டவேண்டும்

இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்களுக்கு மீன்பிடி அனுமதி கொடுப்பதற்கான ஒப்பந்தம் குறித்து தமிழ்ச் சமூகம் குறிப்பாக வடக்கு, கிழக்கு வாழ் தமிழ்ச் சமூகம் அதிக அக்கறையைச் செலுத்தவேண்டியிருக்கிறது என்பது தெளிவாகின்றது. இந்த ஒப்பந்தம் நெருக்கடியைப் பயன்படுத்தி அடித்துப் பிடுங்கும் ஒரு வளச்சுரண்டல் என்பதாக விவரித்திருக்கிறார் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் அகிலன் கதிர்காமர்.

இந்திய மீனவர்களை இழுவை மடித் தொழிலில் இருந்து மடை மாற்றி மாற்றுத் தொழில்களுக்கு, குறிப்பாக நீண்ட நாள் தொழில் செய்யும் கடற் கலங்களுக்கு மாற்றுவதற்கு இணக்கம் காணப்பட்டு ஒரு ஒப்பந்தம் 2016ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட பின்னர் இப்போது ஏன் இந்திய மீனவர்களுக்கு இலங்கைக் கடலில் அனுமதி வழங்கப்படுகின்றது என்கிற கேள்வியை அவர் எழுப்பியுள்ளார். அந்த ஒப்பந்தத்தோடு ஒப்பிடும் பொழுது தற்போது இந்திய இலங்கை இடையே ஏற்பட்டிருக்கக்கூடிய இணக்கம் பெரும் பின்னடைவு என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

2016இல் இரு நாடுகளுக்கும் இடையில் அந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டபோது அயலுறவுத்துறையின் ஆலோசகராக இருந்து அந்த ஒப்பந்தம் நிறைவேறுவதற்கான பங்களிப்பை வழங்கியவர் என்கிற ரீதியில் அவர் இது தொடர்பாக ஆழ்ந்த புரிந்துணர்வைக் கொண்டிருக்கிறார் அதனடிப்படையிலேயே இந்த விடயத்தில் அவரது பார்வை அமைந்திருக்கின்றது.

அவர் சொல்வதில் நூற்றுக்குநூறு வீதம் உண்மை இருக்கின்றது. 7 வருடங்களுக்கு முன்னர் இணக்கம் கண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயத்தை நடைமுறைப் படுத்துவதைவிடுத்து கடல் வளத்தை அனுமதியுடன் கொள்ளையிடுவதற்குத் தாரை வார்ப்பதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எந்த அனுமதியும் இல்லாதபோதே இலங்கைக் கடலுக்குள் இந்திய மீனவர்கள் நுழைவதையும் கரைகளுக்கு மிக நெருக்கமாக வந்து அவர்கள் மீன் பிடிப்பதையும் கட்டுப்படுத்த முடியாத இலங்கைக் கடற்படையினரால் அனுமதியின் பின்னர் அவர்களைக் கட்டுப்படுத்த முடியும் என்று நினைப்பது பகல் கனவு.

அத்துடன் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது பனையால் விழுந்தவனை மாடேறி மித்த மாதிரி, ஏற்கனவே போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மீனவர்களை மீண்டும் மோசமாகப் பாதிக்கும் செயலாக அமையக் கூடாது. அதற்கு ஒருபோதும் அனுதிக்கவும் கூடாது.

எனவே இது விடயத்தில் தமிழ் அரசியல்வாதிகள் மீனவர்களின் பாதிப்பு மற்றும் எதிர்ப்பை நாடாளுமன்றத்தில் உரத்துப் பதிவு செய்யவேண்டும். ஒப்பந்தம் இன்னும் கைச்சாத்திடப்படவில்லைத்தானே, அது தொடர்பான விவரங்களை முழுமையாகப் பார்த்துவிட்டுக் கருத்துத் தெரிவிக்கலாம், இந்த விடயத்தில் எதிர்ப்புத் தெரிவித்தால் அரசியல் தீர்வு விவகாரத்தில் இந்தியாவின் பக்க பலத்தை இழக்க வேண்டி வந்துவிடும் என்று சாட்டுப்போக்குகளைச் சொல்லிக்கொண்டிருக்காமல் தமிழர்களின் கடல் உரிமையையும் மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் விட்டுக்கொடுக்க முடியாது என்பதை அவர்கள் நாடாளுமன்றத்தில் ஆணித்தரமாகப் பதிவு செய்யவேண்டும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இந்தப் பிரச்சினையின் ஆழம் புரியாமலில்லை. கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக வடக்கு இழுவை மடிப் படகு உரிமையாளர்களுடன் நெருக்கமான தொடர்பைப் பேணுபவர் அவர். இன்னும் சொல்லப்போனால் சட்டத்துக்குப் புறம்பான அந்தத் தொழிலை வடக்கில் பாதுகாத்துப் பேணி வருபவர் அவர். எனவே இந்தப் பிரச்சினையின் தாற்பரியம் அவருக்கும் தெரியும். அவர் அமைச்சராகப் பதவி வகித்த காலத்திலேயே தமிழர்களின் கடல் வளம் இந்தியாவிற்குத் தாரை வார்க்கப்பட்டது என்கிற அவப் பெயரை அவர் சுமந்து திரியக்கூடாது. அப்படி நடந்தால் அதுதான் அவர் தமிழ் மக்களுக்குச் செய்யும் வரலாற்றுத் துரோகமாக இருக்கும். எனவே முறையான மாற்றவழிகளையன்றி மீன்பிடி அனுமதி முறையை எதிர்ப்பதற்கு அனைவரும் முன்வரவேண்டும்.

# எல்லை நிர்ணய குழுவின் அறிக்கை செவ்வாய் பிரதமரின் கைகளுக்கு!

## மஹிந்த தேசப்பிரிய திட்டவட்டம்



உள்ளூராட்சிமன்றங்களுக்கான எல்லை நிர்ணய குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கை நாளை மறுதினம் (செவ்வாய்கிழமை) பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் கையளிக்கப்படவுள்ளதாக எல்லை நிர்ணய குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எல்லை நிர்ணய குழு மாவட்ட மட்டத்தில் பெற்றுக் கொண்டுள்ள பரிந்துரைகள், வெவ்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்டுள்ள ஏனைய பரிந்துரைகள் மற்றும் தமது முன்மொழிவுகள் என்பவற்றைப் பரிசீலனை செய்து மாவட்ட மட்டத்திலான எல்லை நிர்ணய பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மாவட்டங்களுக்கு விஜயம் செய்து மேற்படி அறிக்கைக்குத் தேவையான பரிந்துரைகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய மார்ச் 31 ஆம் திகதிக்குள் எல்லை நிர்ணயம் தொடர்பான இறுதி அறிக்கையை சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

25 மாவட்டங்களில் 15 மாவட்டங்களின் செயற்பாடுகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன. மேலும் 6 மாவட்டங்களின் செயற்பாடுகள் 80 சதவீதம் நிறைவடைந்துள்ளன. ஏனையவற்றில் இரு மாவட்டங்களின் செயற்பாடுகள் மாத்திரமே 50 சதவீதத்தையும் விடக் குறைவாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

எனவே, எமது முழுமையான அறிக்கையை எதிர்வரும் மார்ச் 25 – 31 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் தயாரித்து சமர்ப்பிக்கவும், இடைக்கால அறிக்கையை அடுத்த வாரம் சமர்ப்பிப்பதற்கும் தீர்மானித்துள்ளோம். அதற்கமைய தற்போதுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8 ஆயிரத்து 800 இலிருந்து, 5 ஆயிரத்து 100 அல்லது 4 ஆயிரத்து 900 வரை குறைக்க முடியும் என்று நம்புகின்றோம். – என்றார்.

# புதிய பயங்கரவாத தடைச் சட்டத்தில் தடுத்துவைக்கும் அதிகாரம் நீக்கம்

## நீதியமைச்சர் இப்படித் தெரிவிப்பு விஜயதாஸ



பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்படும் சந்தேகநபர்களை அரசியல் தேவைப்பாடுகளின் அடிப்படையிலோ அல்லது பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியின் உத்தரவின் பேரிலோ பொலிஸாரால் தடுத்துவைப்பதற்குக் காணப்படும் அதிகாரம் புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தில் இல்லாதொழிக்கப்படுமென நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதன்படி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்படும் சந்தேகநபர்கள் நீதிமன்றத்தின் முழுமையான மேற்பார்வைக்கு உட்படுத்தப்படுவதுடன் அந்தப் புதிய சட்டத்தின்கீழ் பொலிஸாரோ அல்லது வேறு தரப்பினரோ சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதற்கும், சந்தேகநபர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது என்றும் அவர் உத்தரவாதமளித்துள்ளார்.

தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்படும் சந்தேகநபர்களைத் தடுப்புக்காவல் உத்தரவின் பிரகாரம் நீண்டகாலம் தடுத்துவைப்பதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது.

அதேபோன்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் வழங்கிய வாக்குமூலத்தை ஏற்றுக் கொண்டு, அதனடிப்படையில் நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்படும் நடைமுறை பின்பற்றப்பட்டுவருகின்றது. இருப்பினும் புதிய சட்டத்தின்கீழ் சந்தேகநபரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்படும் நடைமுறை திருத்தியமைக்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்படும் சந்தேநபர்கள்மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்களின் விளைவாகவே அவர்கள் வாக்குமூலம் வழங்குவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டைக் கருத்திற்கொண்டு, அதனுடன் தொடர்புடைய சரத்துக்களைத் திருத்தியமைப்பதற்குத் தீர்மானித்திருப்பதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியா - இலங்கை இடையில் படைத்துறை பயிற்சி அதிகரிப்பு

இந்தியாவும் இலங்கையும் இருதரப்பு இராணுவப் பயிற்சிகளை அதிகரிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன் இரு தரப்பு அனுபவம் மற்றும் திறன்களை முழுமையாகப் பகிர்ந்துக் கொள்ள முடிவெடுத்துள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் இடம்பெற்ற 7ஆவது ஆண்டு இந்தியா – இலங்கை பாதுகாப்பு தொடர்பான பேச்சியில் இரண்டு நாடுகளும் தங்களின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை மதிப்பாய்வு செய்தன.

இதன்போதே, இருதரப்பு பயிற்சிகளை மேம்படுத்த இரு தரப்பும் ஒப்புக்கொண்டதாக இந்திய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இந்திய பாதுகாப்புச் செயலாளர் கிரிதர் அரமனே மற்றும் இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் கமல் குணரத்ன ஆகியோரின் தலைமையில் இந்தப் பேச்சு இடம்பெற்றிருந்தது.

இதேவேளை, இந்தியப் பெருங்கடலில் தங்களது செல்வாக்கை விரிவுபடுத்த சீனா தொடர்ந்தும் முயன்று வரும் நிலையில் இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir

# ரணிலின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் குறித்து மஹிந்தவுடன் பேசத்தயாராகும் வாசு!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் ஜனநாயகத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம்.

தேர்தலை நடத்தினால் அரசாங்கம் தோல்வியடையும் என மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளமையை வரவேற்கிறோம் என இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும், எமக்கும் தற்போது அரசியல் கொள்கை ரீதியில் வேறுபாடுகள் காணப்பட்டாலும், அவர் நாட்டு மக்களின் ஜனநாயகத்துக்கு முன்னுரிமை வழங்கியதை மறுக்க முடியாது.

வெற்றியோ, தோல்வியோ உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற கொள்கையை அவர் கடைப்பிடித்தார்.

தேர்தல் நடைமுறைக்கு அமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட நிலையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் அறிவிப்பு உத்தியோகபூர்வமற்றது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளமை அரசமைப்பை மலினப்படுத்துவதாக அமைந்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் அல்லர், ஆகவே அவருக்கு தேர்தல் தொடர்பில் அக்கறையில்லை.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் அல்ல எந்த தேர்தல் இடம்பெற்றாலும் அவர் படுதோல்வி அடைவது உறுதி. 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் நாட்டு மக்கள் அவரை முழுமையாகப் புறக்கணித்தார்கள், ஆகவே நாட்டு மக்கள் மீண்டும் அவரைத் தெரிவு செய்யமாட்டார்கள்.

ஜனநாயகம்,அரசமைப்பு ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி நாடு செயற்படுகிறதா என்பது தற்போது சந்தேகத்திற்குரியதாக உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்னெடுக்கப்படும் அரசமைப்பிற்கு முரணான செயற்பாடுகள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம்.

தேர்தலை நடத்தினால் அரசாங்கம் தோல்வியடையும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளமை வரவேற்கத்தது.

வெற்றிபெறுவோம் என்ற நிலை காணப்படும் போது தேர்தலை நடத்துவதும்,தோல்வியடைவோம் என்ற நிலை காணப்படும் போது தேர்தலை பிற்போடுவதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் கொள்கையாகக் காணப்படுகிறது.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் தேர்தலை நடத்தினால் பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடையும் என ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.

நிறைவடைந்த ஆறு மாத காலத்தில் பொருளாதாரத்தை முன்னேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

அரச முறை கடன்களைச் செலுத்துவதை இடைநிறுத்தி, அந்த நிதி ஊடாகவே எரிபொருள், எரிவாயு இறக்குமதி செய்யப்படுகிறது.

மறுபுறம் வரி அதிகரிப்பு ஊடாக அரச நிதி அதிகரித்துக் கொள்ளப்படுகிறது. இவ்விரு தீர்மானங்களால் நடுத்தர மக்களுக்கு எவ்வித நிவாரணமும் கிடைக்கப் பெறவில்லை. – என்றார்.






## இலங்கை கடன் விவகாரம் குறித்து ஒழுங்கான நடைமுறைகள் தேவை!

### சர்வதேச நாணய நிதியம் திட்டவட்டம்

இலங்கையின் கடன் விவகாரத்துக்கு சரியான நேரத்திலான ஒழுங்கான நடைமுறைகள் அவசியம் என சர்வதேச நாணய நிதியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜி – 20 அமைப்பின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களின் கூட்டத்தின் பின்னர் வெளியிட்டுள்ள அறிக்கையில் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டினா ஜோர்ஜீவா இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன் பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்கு பொது கட்டமைப்பின் கீழ் சரியான நேரத்தில் ஒழுங்கான நடைமுறைகள் அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

## டிசெம்பர் மாதத்துக்குள் மக்களுக்கு நிவாரணம்!

### ஜனாதிபதி ஆலோசகர் கூறுகிறார்

இழந்த பொருளாதாரத்தை மீட்டெடுக்க கடினமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டாலும் டிசெம்பருக்குள் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

பொருள்களின் விலை சிறிது சிறிதாக குறைக்கப்பட்டு வருவதாகவும், எதிர்காலத்தில் மின் கட்டணமும் குறைக்கப்படும் எனவும் ருவன் விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இக்கட்டான சூழ்நிலையிலும் தனது அரசியலைப் பற்றி சிந்திக்காமல் மக்களைப் பற்றி சிந்தித்து இந்த நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல ஜனாதிபதி முன்வந்தார் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் நாடெங்கிலும் வரிசையில் நிற்கும் நிலைமை மாற்றியமைக்கப்பட்டது என்றும் இரண்டு மாதங்களில் அந்த யுகத்தை மக்கள் கடந்திருந்தார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# யாருக்கு இடையிலானது உக்ரைன் போர்?

- மருதன் -

வரலாற்றில் இதுவரை நிகழ்த்தப்பட்ட எல்லாப் போர்களின் நோக்கமும் ஒன்றுதான்: அமைதி. ஆனால், அந்த நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றிய போரை, இதுவரை மக்கள் கண்டதில்லை. எங்கள் முழு பலத்தையும் பயன்படுத்தினால்தான் உக்ரைனில் அமைதி சாத்தியம் என்றால், அதற்குத் தயங்க மாட்டோம் என்கிறார் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின். நாங்கள் கேட்கும் உதவிகளை மேற்குலகம் விரைந்து அளித்தால் ரஷ்யாவை முறியடித்து அமைதியை நிலைநாட்டிவிடலாம் என்கிறார் உக்ரைன் அதிபர் ஸெலன்ஸ்கி.

### ரஷ்யாவின் தார்மிகத் தோல்வி

மேற்குலகம் உக்ரைனுக்குத் தளவாடங்களை அள்ளி அள்ளிக் கொடுத்துக்கொண்டே இருந்தால் போர் நீண்டுகொண்டே போகுமே ஒழிய, நிற்காது என்கின்றனர் சர்வதேச அரசியல் நோக்கர்கள். தொடர்ந்து தோற்றுக்கொண்டிருக்கும் ரஷ்யா, தனது பழம்பெருமிதக் கனவுகளிலிருந்து விழித்துக்கொள்ளா விட்டால் மீளா இருளில் மாட்டிக்கொள்ளும் ரஷ்யாவை அழித்தவர் என்னும் பெயர்தான் புடினுக்கு எஞ்சும் என்கிறார்கள் மேற்குலகின் அரசியல் கோட்பாட்டாளர்கள்.

உக்ரைனை மீட்பதற்காக மேற்கொள்ளப்படும் 'சிறப்பு ராணுவ நடவடிக்கை' என்னும் அறிவிப்போடு கடந்த ஆண்டு பெப்ரவரி 24 அன்று இப்போரைத் தொடங்கிவைத்தார் புடின். சுண்டைக்காய் நாடு; நசுக்கிவிட்டுத் திரும்பிவிடலாம் என்னும் நம்பிக்கையோடு கிட்டத்தட்ட 2 லட்சம் வீரர்கள் உக்ரைனுக்குள் ஊடுருவினர்.

சில பகுதிகளை அவர்களால் உடனடியாகக் கட்டுக்குள் கொண்டுவரவும் முடிந்தது. மார்ச் இறுதியில் உக்ரைன் சுதாரித்துக்கொண்டு தடுப்பாட்டத்தைத் தொடங்கியது. வடக்கிலும் தெற்கிலும் ரஷ்யர்களை எதிர்கொண்டு வெற்றிபெற்றதோடு, இழந்த பகுதிகள் சிலவற்றையும் அந்நாடு மீட்டெடுத்துவிட்டது. அத்துடன் ரஷ்ய வீரர்கள் நிகழ்த்திய போர்க் குற்றங்களையும் வெளிச்சம்போட்டுக் காட்டிவிட்டது.

### வலுப்பெறும் உக்ரைன் தேசியம்

உக்ரைனியர்கள் ரஷ்யாவின் பண்பாட்டுத் தாக்கத்துக்கு உள்ளானவர்கள். ரஷ்யா ஓர் அந்நிய நாடாக அவர்களுக்கு இருந்ததில்லை. 1945 முதல் 1991 வரை சோவியத் ஒன்றியத்தின் ஒரு பகுதியாக இருந்தது உக்ரைன்.

சோவியத்தின் உடைவுக்குப் பிறகு சுதந்திரமான, நடுநிலை நாடாக உக்ரைன் மாறியது. என்கிறபோதிலும், ரஷ்யத் தாக்கங்களிலிருந்து முழுக்க விடுபட்டுத் தனித்ததொரு உக்ரைனிய அடையாளத்தை அவர்கள் உருவாக்கிக்கொள்ளவில்லை. அதற்கான அவசியத்தை புடின் அவர்களுக்கு வலுவாக உணர்த்திவிட்டார்.

புடினின் இந்தப் போர், வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உக்ரைனை ஒன்றிணைத்திருக்கிறது. உக்ரைனின் கிழக்குப் பகுதியில் உள்ள டோன்பாஸில் இருந்த ரஷ்ய ஆதரவாளர்களில் கணிசமானவர்கள் இன்று உக்ரைனிய தேசியவாதிகளாக மாறியிருக்கின்றனர். அணு ஆயுதப் பலசாலியான ரஷ்யாவால் இன்றுவரை போரில் வெல்ல முடியாமல் இருப்பதற்குக் காரணம், பலம்பெற்றுவரும் இந்த உக்ரைனிய தேசியவாத உணர்வுதான்.

### வெறுப்பின் இலக்கான ரஷ்யா

ஐநா புள்ளிவிவரங்களின்படி பெப்ரவரி 13 வரை குறைந்தது 7,200 பேர் உக்ரைனில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். குறைந்தது 200 குழந்தைகள் இறந்துபோயிருக்கலாம். அதிகாரபூர்வ விவரங்கள் இல்லை என்பதால் பல்லாயிரக்கணக்கான வீரர்கள் இருதரப்பிலும் கொல்லப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்கலாம். லட்சக்கணக்கானோர் ஏதிலிகளாக்கப் பட்டிருக்கிறார்கள். எந்த அளவுக்குத் தங்கள் நாட்டை நேசிக்கிறார்களோ கிட்டத்தட்ட அதே அளவுக்கு ரஷ்யாவை இன்றைய உக்ரைனியர்கள் வெறுக்கிறார்கள்.

ஸெலென்ஸ்கியின் பிம்பம் பன்மடங்கு வளர்ந்து நிற்கிறது என்றால், புடினின் பிம்பம் கடுகாகச் சிறுத்துக் கிடக்கிறது. புதிதாக எதுவும் கிடைக்கவில்லை என்பதோடு, இருப்பதையும் இழந்துவிட்டு நிற்கிறார். ஒரு சிறு ஏற்றமாவது கிடைக்காதவரை, ஒரு கீற்று வெளிச்சமாவது தன்மீது விழாதவரை அவர் இப்போரை நிறுத்துவதற்கு வாய்ப்பில்லை என்றே தோன்றுகிறது. போர்க்களத்தைப் பொறுத்தவரை முழு வெற்றி மட்டுமே வெற்றி என்பதால், கிரைமியா உள்பட அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ரஷ்யாவின் ஆதிக்கத்தை முறியடிக்காதவரை உக்ரைனைச் சுதந்திர நாடாக அழைக்க முடியாது என்பதை ஸெலென்ஸ்கியும் உணர்ந்திருக்கிறார்.

தன் முழு பலத்தையும் திரட்டிக்கொண்டு ரஷ்யா அடியெடுத்து வைத்தால் உக்ரைன் தாங்காது என்பதையும் அவர் அறிவார். அதனால்தான் கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் உரத்த குரலில் அவர் மேற்குலகிடமிருந்து உதவிகளைக் கேட்ட வண்ணம் இருக்கிறார்.

இந்நிலையில், அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தனது ஐரோப்பியப் பயணத்தின்போது திடீரென உக்ரைன் சென்று ஸெலென்ஸ்கியைச் சந்தித்திருக்கிறார். ரஷ்யாவுக்கு இதுவரை தார்மிக ஆதரவை வழங்கிவரும் சீனா, இனி ஆயுத உதவிகளையும் வழங்கலாம் என அமெரிக்கா எச்சரிக்கிறது.

### பனிப்போரின் நீட்சி

மேற்குலகம், குறிப்பாக நேட்டோவின் பாத்திரம் இந்தப் போரை மேலும் சிக்கலானதாக மாற்றிவிட்டது. நேட்டோ அமைப்பு கிழக்கு நோக்கித் தன் பரப்பை விரிவாக்கிக்கொண்டே போவதை ரஷ்யாவுக்கான எச்சரிக்கை மணியாகவே புடின் பார்க்கிறார். கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி உக்ரைனில் தன் ராணுவக் கூடாரத்தை அமைப்பதே நேட்டோவின் இலக்கு. இதை அனுமதித்தால் நாளை ரஷ்யாவின் இருப்புக்கே ஆபத்து நேரலாம் என்கிறார் புடின். நேட்டோவில் சேர முயன்ற உக்ரைன் மீது ரஷ்யா கோபம் கொண்டதன் பின்னணியும் இதுதான்.

உக்ரைனை நேட்டோ உறுப்பினராக்கும் எண்ணமோ அங்கே ராணுவத்தை நிறுத்தும் எண்ணமோ இல்லை என்கிறது நேட்டோ. ரஷ்யாவின் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்துவதும் உக்ரைனின் சுதந்திரத்தைப் பேணிக் காப்பதும்தான் எங்கள் இலக்கு என்கின்றன அமெரிக்காவும் மேற்குலகும். வெளியே சொல்லப்படும் இந்த எளிய நோக்கங்களுக்காக மட்டுமே உக்ரைனின் பின்னால் இவர்கள் அனைவரும் அணிதிரண்டு நிற்கிறார்கள் என்பது நம்பும்படியாக இல்லை.

போரைத் தொடர்வது யார்?: உக்ரைன் போர் என்பது உக்ரைனுக்கான போர் அல்ல. இது பனிப்போரின் நீட்சி. அதனால்தான் அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், ஆஸ்திரேலியா, ஐரோப்பிய ஒன்றியம் என்று பலவும் பில்லியன் கணக்கில் உக்ரைனுக்குக் கொட்டிக் கொடுத்துக்கொண்டிருக்கின்றன.


இதை உக்ரைனும் அநேகமாக உணர்ந்திருக்கும். வெளிப்படுத்தாவிட்டாலும் இந்த அடிப்படைப் புரிதலை அனைவரும் கொண்டிருப்பதால், இது விரைவில் முடியப்போகும் போரல்ல என்பதை அனைவரும் நன்கு உணர்ந்தே இருக்கின்றனர்.

எந்தவொரு போரையும்போல் இதுவும் அதில் பங்கேற்பவர்களை மட்டுமின்றி, ஒட்டுமொத்த உலகையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதித்துக் கொண்டிருக்கிறது.

ஏற்கெனவே உள்ளவை போக புதிய கட்டுப்பாடுகளை ரஷ்யா மீது விதிக்க ஐரோப்பிய ஒன்றியம் தயாராகிக்கொண்டிருக்கிறது. உணவு, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பண்டங்களின் ஏற்றுமதி, இறக்குமதிச் சங்கிலிகள் பல இடங்களில் அறுபட்டிருப்பதால் அமெரிக்கா, ஐரோப்பா தொடங்கிப் பல இடங்களில் தட்டுப்பாடு நிலவுகிறது. எப்பாடுபட்டாவது போரை நிறுத்தியே ஆக வேண்டிய கட்டாயத்துக்கு இத்தட்டுப்பாடு அனைவரையும் தள்ளிக்கொண்டிருக்கிறது.

உக்ரைனிலும் சரி, ரஷ்யாவிலும் சரி, மக்களின் விருப்பம் ஒன்றுதான் போர் முடிய வேண்டும். ஆனால், மக்களின் விருப்பத்தைப் பொருட்படுத்தாமல், புவிசார் அரசியல் நோக்கங்களுக்காகத் தலைவர்கள் போரைத் தொடர்ந்துகொண்டிருக்கிறார்கள். உண்மையான போர் மக்களுக்கும் அவர்களை ஆளும் தலைவர்களுக்கும் மத்தியில்தான் தொடர்ந்துகொண்டிருக்கிறது.

பெப். 24: ரஷ்யா - உக்ரைன் போர் தொடங்கி ஓராண்டு நிறைவு.



# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம்
# பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall



**Tel:- 021 228 3701, 071 7354308**

**Whatsapp:- 071 7736 4308**

**No.315, Kandy Road,
Kilinochchi**



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





**FULL OPTION**

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

# பிரதமர் மாற்றம் தொடர்பில் எந்த முடிவும் எடுக்கவில்லை!

## மூன்றாந்தர அரசியல் செய்யக்கூடாது என்கிறார் சாகர




பிரதமரை மாற்றுவது தொடர்பில் எவ்விதமான முயற்சிகளையும் நாம் முன்னெடுக்கவில்லை. எமது கட்சியிலிருந்து வெளியேறியவர்கள் மூன்றாந்தர அரசியல் செய்கின்றனர் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

பிரதமராக மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவை நியமிப்பதற்கு பொதுஜனபெரமுனவினர் முயற்சிகளை முன்னெடுப்பதாக பேராசிரியர் சன்ன ஜயசுமான தெரிவித்த கருத்து தொடர்பில் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பொதுஜன பெரமுனவில் இருந்து வெளியேறியுள்ள ஓர் அணியினர் தற்போது அநாதரவாக நிற்கின்றார்கள். அவர்கள் தமது அரசியலை வளர்த்துக் கொள்ளவும், அன்றாட பிரபல்யத்துக்காகவும் வெவ்வேறு சூட்சுமங்களைக் கையாள்கின்றார்கள். அதிலொன்றுதான், மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்குவதற்கு முனைகின்றோம் என்ற கருத்தாகும்.

சன்ன ஜயசுமன, தமது அரசியலில் இருப்பு கேள்விக் குறியாகிவுடன், கட்சியையும், அதன் மூத்த அங்கத்தவர்களையும் வைத்து புனைகதைகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்.

அவர் தமது இயலாமையால், மூன்றாந்தரமான அரசியல் செய்து கொண்டிருக்கின்றார். ஆகவே, சன்ன ஜனசுமான எம்.பி. இடத்தில் யாராவது அணுகியிருந்தால் அதுபற்றிய முழுமையான விவரங்களை வெளியிட வேண்டும். – என்றார்.

# 9 நாட்டு சுற்றுலாப்பயணிகளை உள்ளீர்க்க விசேட அவதானம்!

## சாலக கஜபாகு புதிய வியூகம்

இந்த ஆண்டில் இந்தியா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் உள்ளடங்கலாக இலங்கைக்கு பெருமளவு சுற்றுலாத்துறைசார் வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய 9 நாடுகளின் சுற்றுலாப்பயணிகளை உள்ளீர்த்துக் கொள்வதில் வெகுவாகக் கவனம் செலுத்தியிருப்பதாக இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டுப் பணியகத்தின் தலைவர் சாலக கஜபாகு தெரிவித்துள்ளார்.

'நாட்டின் சுற்றுலாத்துறை மேம்பாட்டைப் பொறுத்தமட்டில் நாம் பூகோள ரீதியிலான பிரசாரத்துக்குச் செல்லப்போவதில்லை. மாறாக, 2023 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் இலக்கை அடைந்துகொள்வதை முன்னிறுத்தி, இலங்கைக்கு அதிக சுற்றுலாத்துறைசார் வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய 9 நாடுகளை உள்ளீர்த்துக்கொள்வதில் விசேட கவனம் செலுத்தியுள்ளோம்' என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிகளவில் செலவிடக்கூடிய சுற்றுலாப் பயணிகளைக்கொண்ட இந்தியா, ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, மத்திய கிழக்கு நாடுகள், நோர்டிக் நாடுகள் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய 9 நாடுகளே இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டுப்பணியகத்தின் விசேட அவதானத்திற்குரிய நாடுகளின் பட்டியலில் இடம்பெற்றிருப்பதுடன், எதிர்வரும் மே மாதம் முதல் அந்த நாடுகளின் சுற்றுலாப்பயணிகளை ஈர்ப்பதற்குரிய பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.




இலங்கை, இந்த ஆண்டு சுமார் 1.55 மில்லியன் சுற்றுலாப்பயணிகளின் வருகையை அடைந்துகொள்வதற்கும், சுற்றுலாத்துறையின் ஊடாக 2.88 பில்லியன் டொலர் வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கும் எதிர்பார்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மலசலகூடத்தில் சிக்கி இருந்த சிறுத்தைகுட்டி ஹற்றனில் மீட்பு!

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெரோல் தோட்டத்திலுள்ள தோட்ட குடியிருப்பு ஒன்றின் மலசலகூடத்தில் சிக்கியிருந்த சிறுத்தைக்குட்டியை பிடிக்க நல்லதண்ணி மற்றும் நுவரெலியா வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நான்கு மாதங்களேயான இந்த சிறுத்தைக்குட்டி மலசலகூடத்தில் சிக்கியபோது தோட்ட தொழிலாளி ஒருவர் சிறுத்தையை பார்த்துவிட்டு மலசலகூடத்தின் கதவை மூடிவிட்டு ஹற்றன் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

சிறுத்தையை அங்கிருந்து மீட்பதற்காக நல்லதண்ணி வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர், உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சிறுத்தையை பாதுகாப்பாக மீட்டு, அதன் தாய் சிறுத்தை வசிக்கும் பகுதியில் விடுவதற்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

இதேவேளை ஹெரோல் தோட்டத்தில் சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதுடன், அந்தத் தோட்டத்தில் உள்ள நாய்களும் சிறுத்தைகளால் வேட்டையாடப்படுகின்றன என தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.



# அரச நிறுவனங்களில் கட்டணம் செலுத்தவது டிஜிற்றல் மயமாகும்!

அடுத்த வருடம் மார்ச் மாதம் முதல் அரச நிறுவனங்களின் அனைத்து கட்டணங்களும் டிஜிற்றல் முறை மூலம் பெற்றுக்கொள்ளப்படும் என தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பான தொழில்நுட்ப வழிகாட்டல்கள் இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் டிஜிற்றல் மயமாக்கலுக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், இணையப் பாதுகாப்புச் சட்டம் இந்த ஆண்டுக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

# 6 மாதங்கள் மனிதாபிமான உதவிகளை வழங்க 45 லட்சம் டொலர் நிதி அவசியம்!

## உலக உணவுத்திட்டம் தகவல்

உலக உணவுத்திட்டம் கடந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள 6 லட்சத்து 36 ஆயிரத்து 125 பேருக்கு அவசியமான உதவிகளை வழங்கியிருப்பதுடன், எதிர்வரும் ஜூன் மாதம் வரையான 6 மாதகாலத்துக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு 45 லட்சம் டொலர் நிதி அவசியமென மதிப்பிட்டுள்ளது.

தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டின் பொருளாதாரம் இன்னமும் மீட்சியடையாத நிலையில், அதன்விளைவாக உணவுப்பாதுகாப்பற்ற நிலைக்குத்தள்ளப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துவருகின்றது. அதேவேளை நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் கிளை அமைப்புக்களான உலக உணவுத்திட்டம், உணவு மற்றும் விவசாய அமைப்பு, யுனிசெப் அமைப்பு என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு சர்வதேசப் பொதுக்கட்டமைப்புக்கள் அத்தியாவசிய உதவிகளை வழங்கிவருகின்றன.

அந்த வகையில், இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருப்போருக்குக் கடந்த ஜனவரி மாதம் வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்டுள்ள உதவிகள் மற்றும் தேவையான நிதியுதவி என்பன தொடர்பாக உலக உணவுத்திட்டத்தால் வெளியிடப்பட்டுள்ள மாதாந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தரவுகளின் பிரகாரம், இதுவரையான காலப்பகுதியில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு மொத்தமாக 70 லட்சம் டொலர் பெறுமதியான நிதியுதவி வழங்கப்பட்டிருப்பதுடன் 1,069,557 மெட்ரிக்தொன் உணவுப்பொருள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அதேவேளை கடந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் 6 லட்சத்து 36 ஆயிரத்து 125 பேருக்கு அவசியமான அத்தியாவசிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோன்று கடந்த ஆண்டு ஜூன் மாதம் உலக உணவுத்திட்டத்தின் அவசர உதவி வழங்கல் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தற்போதுவரை 4 லட்சத்து 89 ஆயிரத்து 40 பேருக்கு நிதியுதவியும் 3 லட்சத்து 62 ஆயிரத்து 100 குடும்பங்களுக்கு உணவுப்பொருள்கள்சார் உதவியும் வழங்கப்பட்டுள்ளன. இந்த உதவிகள் மொத்தமாக 14 லட்சம் மக்களைச் சென்றடையவேண்டும் என்பதே உலக உணவுத்திட்டத்தின் இலக்காகும்.

மேலும் நாட்டின் 25 மாவட்டங்களிலுள்ள 15 ஆயிரம் குடும்பங்களை இலக்குவைத்து உணவு மற்றும் விவசாய அமைப்பும் உலக உணவுத்திட்டமும் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து உணவுப்பாதுகாப்பு தொடர்பான கூட்டு மதிப்பீடொன்றை முன்னெடுக்கவுள்ளன. அதுமாத்திரமன்றி இந்த வருடம் ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையான 6 மாதகாலப்பகுதியில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்குரிய உதவிகளை வழங்குவதற்கு 45 லட்சம் டொலர்கள் அவசியமென மதிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஆற்றில் நீராடச் சென்ற இளைஞர் சடலமாக மீட்பு

நானுஓயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டெஸ்போட் பிரதேசத்தில் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்துக்குச் செல்லும் ஆற்றில் நேற்று நண்பகல் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கிக் காணாமல்போன நிலையில் மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

நானுஓயா டெஸ்போட் மேல் பிரிவு பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய மகேந்திரன் சதிஸ் குமார் என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

நண்பர்களுடன் நீராடிக்கொண்டிருந்த போதே குறித்த நபர் நீரில் மூழ்கிக் காணாமல்போயிருந்த நிலையில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

தனது வீட்டில் சிறிய முரண்பாடு காரணமாக நானுஓயாவில் கிலாரண்டன் பகுதியில் தனது உறவினர் வீட்டில் ஐந்து நாட்களுக்கு மேலாக தங்கி இருந்த நிலையிலே நேற்று இவர் நீராடச் சென்றுள்ளார் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

பொலிஸார், பிரதேச மக்கள் ஆகியோர் சுழியோடிகளின் உதவியுடன் இளைஞரின் சடலத்தைக் கரைக்கு இழுத்துக்கொண்டு வந்து சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலயில் ஒப்படைத்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுவர் இல்ல முதலாண்டு விழா





கெத்சமெனே கொஸ்பல் தேவாலய காருண்யம் சிறுவர் அபிவிருத்தி நிலையம் வியாழக்கிழமை தனது முதலாம் ஆண்டு வெற்றி விழாவினை மிகவும் சிறப்பாக கொண்டாடியது. இந்நிறுவனம் திருச்சபையை அண்டியுள்ள சுமார் 250 சிறுவர்களுக்கு ஒரு வயது தொடக்கம் 20 வயது வரையான காலப் பகுதியில் அவர்களது கல்வி உடல் சமூக ஆரோக்கியம் என சகல வாழ்க்கைத் தேவைகளையும் வழங்கி பராமரித்து வருவதுடன் 20 கர்ப்பிணி தாய்மார்களுக்கும் அவர்களது நாளாந்த உள உடல் சமூக தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றது.

கெத்சமெனே கொஸ்பல் தேவாலய தலைமை போதகர் வண. பெரியசாமி அன்றுஸின் வழிநடத்தலில் போதகர் வண. செல்வநாயகம் இயக்குனராக இருந்து இந்நிறுவனத்தினை இயக்கி வருகின்றார். முல்லை மாவட்டம், புதுக்குடியிருப்பு, வள்ளிபுனத்தில் இந்தச் சிறுவர் இல்லம் இயங்கி வருகின்றது.

இதன் முதலாம் ஆண்டு நிறைவு விழாவில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் சி ஜேயகாந்த் பிரதம விருந்தினராகவும் புது குடியிருப்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எம் கெங்காதீஸ்வரன் மற்றும் கெத்சமெனே கொஸ்பல் தேவாலய தலைமை போதகர் (கொழும்பு) வண. அண்ணன் ராஜமணி, சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டளை அதிகாரி லெப் கேனல் துசார திசா நாயக்க மற்றும் கிராம சேவகர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில் நிறுவனத்தின் பயனாளிகள் அல்லாத 300 தேவைப்பாடுடைய சமூக உறுப்பினர்களுக்கும் 270 பயனாளிகளுக்கும் ரூபாய் 15,000 பெறுமதியான உணவுப் பொதியும் வழங்கப்பட்டது.

# நாட்டின் மின்கட்டண அதிகரிப்பினால் மலையகமே முதலில் இருளில் மூழ்கும்!

## வேலு குமார் வேதனை



நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடிகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். குறிப்பாக, தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா கூடக் கிடைப்பதில்லை. இந்நிலையில் தற்போது மின் கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அன்றாட வாழ்க்கைச் செலவைக் கொண்டு நடத்த முடியாத மக்களால் அதிகரித்த மின்கட்டணத்தை செலுத்த முடியாமல் போகும். அப்போது மலையகமே முதலில் இருளில் மூழ்கும் என எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடிகள் காரணமாக அதிக அளவில் மலையக மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஒருநாள் அடிப்படைச் சம்பளமாக ஆயிரம் ரூபா கூட பல பகுதிகளில் கிடைப்பதில்லை.

இன்று வாழ்க்கைச் செலவு பன்மடங்கு அதிகரித்துள்ளது. மின்சாரக் கட்டணம் அதிகரித்துள்ளது. நகரப்பகுதியில் உள்ள பணக்காரர்கள் கூட மின் கட்டண உயர்வால் திண்டாடுகிறார்கள். அவர்களின் நிலைமையோ இவ்வாறு இருக்க தோட்ட தொழிலாளர்களின் நிலைமை என்ன என்பது தொடர்பில் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எவ்வாறு மின்சாரக் கட்டணத்தைச் செலுத்துவார்கள்? அதிகரித்த மின்கட்டணத்தை செலுத்த முடியாமல் மலையகமே முதலில் இருளில் மூழ்கும் என்பது உறுதியாகும்.

நாம் எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ளோம். அரசியல் ரீதியாகப் பலமிழந்துள்ளோம். ஆனால், இன்று அரசாங்கத்தில் சிறுபான்மை சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் இருக்கிறார்கள். அரசாங்கத்துக்கு இவர்களால் அழுத்தம் பிரயோகிக்க முடியும். ஆனால், பதவிகளில் இருப்பவர்கள் மௌனமாக இருக்கிறார்கள். இருப்பினும், எதிர்க்கட்சி என்ற வகையில் தொடர்ச்சியாக நாங்கள் அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுக்கிறோம்.

அதேவேளை, அதிகாரத்தில் உள்ள எந்தவொரு அரசாங்கமும் இனவாதத்தை அடிப்படையாக கொண்டே செயற்படுகின்றது. அதாவது அதிக அந்நிய செலாவணியை பெற்றுத் தருகின்ற பெருந்தோட்டத்துறை காணப்பட்ட போதிலும், அதனைக் கண்டு கொள்வதாக இல்லை. இதைப் பார்க்கும்போது சகல அரசாங்கங்களும் இனவாதத்தை அடிப்படையாக கொண்டு செயற்படுகின்றன என்றே கூறலாம்.

மேலும், தோட்டத் தொழிலாளர்களின் ஒரு நாள் சம்பளம் 3 ஆயிரத்து 500 ரூபா வரையில் அதிகரிக்கப்பட வேண்டும். அதன் சாத்தியத் தன்மையை எவ்வாறானது என்பது தெரியாது. ஆனால், இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

மக்களுக்கு உயிர் வாழ்வதற்கு உணவில்லை, மருந்து இல்லை, மின்சாரம் இல்லை, அடிப்படை வசதிகள் கூட இல்லை என்றால் அடுத்த கட்டமாக மக்கள்சுயாதீனமாகவீதிக்கு இறங்கிப்போராடுவார்கள்.

எதிர்காலத்தில் மக்கள் போராட்டம் எழப் போகிறது. இந்த போராட்டங்களின் விளைவு பாரதூரமானதாகக் காணப்படும். ஆனால், இதுபோன்றதொரு மிக மோசமான நிலை ஏற்பட்டுவிடக்கூடாது. இதன் காரணமாகவே நாங்கள் அரசாங்கத்திடம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம்.

இந்நாட்டின் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். இது தொடர்பில் நாங்களும் சர்வதேச நாடுகளுடன் கலந்துரையாடுகிறோம். குறிப்பாக, அயல் நாடான இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளுடன் எமது மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கிறோம். - என்றார்.

# புண்ணிய நாச்சிய அம்மை நினைவு விழா யாழ். நகரில்



(எஸ்.நிதர்ஷன்)



யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் ஏற்பாட்டில் புண்ணிய நாச்சி அம்மையார் நினைவு விழா நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள சைவபரிபாலன சபையின் அலுவலகத்தில் சபையின் தலைவர் வி.சிறிசக்திவேல் தலைமையில் இந் நிகழ்வுகள் இடம்பெற்றன.

புதிதாக அமைக்கப்பட்ட ஆறுமுகநாவலரின் திருவுருவச் சிலையை நிகழ்வின் தலைமை அதிதி ஆறு. திருமுருகன் திறந்து வைத்தித்தார்.

இதைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் தேவாரம் இசைக்கப்பட்டு மாணவிகளின் வரவேற்பு நடனத்துடன் நிகழ்வுகள் தொடங்கி நடந்தன.

சபையினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் இந்து சாதனம் நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நூலினை சபையின் தலைவர் வெளியிட்டு வைக்க அதன் முதற் பிரதியை ஆறுதிருமுருகன் பெற்றுக் கொண்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

# அரசுக்கு எதிராகக் கொழும்பில் அலையெனத் திரண்ட மக்கள்...

'தேர்தலைப் பிற்போடுகின்ற சூழ்ச்சிக்கு எதிரான எதிர்ப்பு' என்ற தொனிப்பொருளில் கொழும்பில் நேற்று அரசுக்கு எதிராகப் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் மக்கள் அலையெனத் திரண்டு பங்கேற்றனர்.




















காலைக்கதிர் Kalaikkathir

# பச்சைக்கொடி காட்ட இணங்கியது சீனா!

## நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்



இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சாதகமான ஒரு தீர்மானத்தை மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்குள் அறிவிப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள அரசாங்கம் மேற்கொண்டுள்ள பேச்சு தொடர்பில் வினவியபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

கொவிட் பெருந்தொற்று தாக்கத்தின் பின்னரான காலப்பகுதியில் இலங்கை போன்ற குறைந்த வருமானம் பெறும் நாடுகள் எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பாதிப்பு மற்றும் பொருளாதார பாதிப்பில் இருந்து மீள்வதற்கு வழங்கப்படும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் அமெரிக்கா மற்றும் சீன நிதித்துறை அதிகாரிகளுக்கு இடையில் விசேட பேச்சு கடந்த வாரம் இந்தியாவில் இடம்பெற்ற ஜி – 20 மாநாட்டில் இடம்பெற்றது.

இந்த மாநாட்டின் இரண்டாம் கட்டத்தின்போது இலங்கை உள்ளிட்ட குறைந்த வருமானம் பெறும் நாடுகள் எதிர்கொண்டுள்ள சீன கடன் மற்றும் இதர விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு சீனா இரண்டு வருட கால அவகாசம் வழங்க எடுக்கப்பட்ட தீர்மானம் இதன்போது தீவிரமாக ஆராயப்பட்டது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சாதகமான ஒரு தீர்மானத்தை மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிப்பதாக சீன கூட்டரசாங்கம் இலங்கைக்கு அறிவித்துள்ளது.

இலங்கையின் பிரதான நிலை கடன் வழங்குநராக சீனா விளங்குவதால் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்புக்கு சீனாவின் உத்தரவாதம் அவசியமாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் இந்தியா மற்றும் சீனாவின் ஒத்துழைப்பு சாதகமாகக் காணப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைத்தால் இலங்கையின் அரச கடன் நிலைபேறான தன்மையில் காணப்படும். அதனைத் தொடர்ந்து சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணலாம். – என்றார்.

# காங்கேசன் துறைமுக அபிவிருத்தியை முடித்து பாண்டிச்சேரி படகு சேவை ஆரம்பிக்கத் திட்டம்!

நீண்ட காலமாக எதிர்பார்க்கப்படும் வடக்கு மற்றும் பாண்டிச்சேரிக்கான படகு சேவையைத் தொடங்க, காங்கேசன்துறை துறைமுகத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியை விரைந்து முடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், சுங்கம் மற்றும் குடிவரவுத் துறையினருக்கான வசதிகளும் மார்ச் மாத இறுதிக்குள் ஏற்படுத்தி கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பயணிகளை துறைமுகத்துக்கு கொண்டு செல்வதற்கும், புறப்படுவதற்குமான சேவையை வழங்குவதற்கு படகுகள் உபகரணங்கள் மற்றும் பணியாளர்கள் சர்வதேச தரத்தை பூர்த்தி செய்யும் வகையில் அமைந்திருக்க வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பலாலி விமான நிலையத்திலிருந்து தென்னிந்தியாவின் பல இடங்களுக்குச் செல்லும் விமான சேவைகள் அண்மையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

# பேராசிரியர்களின் குடும்பத்தவர்களுக்கு அரச செலவில் விமான பயண ரிக்கெட்?

## அமைச்சரவை யோசனை ஜனாதிபதியால் நிராகரிப்பு

பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் முதுகலைப் பட்டப் படிப்புகளுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும்போது அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் அரசாங்கத்தால் விமான பயண சீட்டுக்களை வழங்குவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள யோசனையை அமைச்சரவை அங்கீகாரத்துக்காக தற்போது சமர்ப்பிக்காமலிருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை மீளாய்வு செய்து மீண்டும் அனுப்புமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஊடாக அமைச்சரவை செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை வினாத்தாள்கள் மற்றும் விடைத்தாள்களைத் தயாரிப்பதற்கான கொடுப்பனவுகளை அரச பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்களுக்கு வழங்குவதோடு, அதற்கான வரியை அறவிடாமலிருக்குமாறும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

முதுகலை பட்டப்படிப்புக்களை தொடர்வதற்காக பேராசிரியர்களுக்கு 7 ஆண்டுகள் விடுமுறை இரு சந்தர்ப்பங்களில் வழங்கப்படுவதோடு, பெரும்பாலானோருக்கு இது புலமைப்பரிசிலாகக் கிடைக்கப்பெறுகின்றது. இதன் போது அவர்களின் குடும்ப அங்கத்தவர்களும் வெளிநாடு செல்கின்றமையால் அவர்களுக்கும் அரசாங்க செலவில் விமான பயண சீட்டுக்கள் வழங்கப்பட வேண்டும் என்று யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு அவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளுக்கான வரியை நீக்குமாறும், பல்கலைக்கழகங்களுக்கான உப வேந்தர்களை நேர்முகத்தேர்வின் றித் தெரிவு செய்யுமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களின் சங்கங்களின் கூட்டமைப்பால் இந்த யோசனைகள் அடங்கிய ஆவணம் உயர் கல்வி அமைச்சின் ஊடாக அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில், அவற்றில் திருத்தங்களை மேற்கொண்டு மீள சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அமைச்சரவை செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட அமைச்சரொருவர் குறிப்பிட்டார்.

# பிரான்ஸ் பொலிஸ் பிரிவில் முக்கிய பதவியில் இணைந்த யாழைச் சேர்ந்த தமிழ் இளைஞன்!

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இலங்கைத் தமிழ் இளைஞர் பிரான்ஸ் பொலிஸ் பிரிவில் முக்கிய பதவியில் இணைந்துள்ளார்.

பிரான்ஸில் தேசிய பொலிஸ் அதிகாரி டிப்ளோமா பட்டம் பெற்ற 175 பேருக்கான சான்றிதழ்களை உள்துறை அமைச்சர் வழங்கியுள்ளார்.

இதன்போது யாழ்ப்பாணத்தை சேர்ந்த இலங்கைத் தமிழ் இளைஞரான பெண்கலன் இதயசோதி தம்பதியினரின் மகனான பிராண்ட்போன்ட் காலன் பொலிஸ் அதிகாரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பிரான்ஸில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் இவர் பொலிஸ் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# சு.க. பொதுச் செயலர் பதவியிலிருந்து தன்னை நீக்க சதி என்கிறார் தயாசிறி!



சுதந்திரக் கட்சியிலிருந்து விலகியவர்கள் தனக்கு எதிராக சதி செய்து வருகின்றனர் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பொதுச்செயலாளரை பதவியில் இருந்து என்னை நீக்கினால்தான், தாம் கட்சிக்கு வருவோம் என ஒழுக்காற்று குற்றச்சாட்டின் பேரில் ஏற்கனவே கட்சியிலிருந்து நீக்கப்பட்ட குழுவினர் தெரிவித்து வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான சதிகள் அனைத்தையும் தாம் ஐந்து சதத்துக்கும் கணக்கெடுக்கவில்லை எனவும் தம்மை கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்குமாறு இவர்கள் கட்சிக்கு முன்மொழிந்துள்ளனர் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கூறியுள்ளார்.

# கல்வி அமைச்சர் சுசில்மீது ஒழுக்காற்று நடவடிக்கை!



பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை நாடாளுமன்ற நடவடிக்கைகளின் போது தகாத வார்த்தையைப் பயன்படுத்தியமைக்காக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கக் கோரப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கும் போதே பிரேமஜயந்த மேற்படி வார்த்தை பிரயோகத்தைப் பயன்படுத்தினார் என்று முறையிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்திலிருந்த கெமரா அமைச்சரிடமிருந்து விலக்கியபோதும் அமைச்சர் இந்த வார்த்தையைப் பயன்படுத்தியபோது, அவரது ஒலிவாங்கி இயங்கிக்கொண்டிருந்தது.

இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் இந்த விடயத்தை முன்வைத்து, அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

## பொருளாதார .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய சமூக அமைப்புக்களும் அரசியல்வாதிகளும் இதனை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வார்கள். அப்படி நடக்கும்போதுதான் பாதிப்பின் தன்மையையேனும் குறைக்க முடியும்.

இ.மி.சபை, தேசிய நீர் வழங்கல் சபை என எல்லாவற்றையும் விற்கும் நிலைக்கு அரசு வந்துவிட்டது. இவற்றை விற்றால் பெரும் நெருக்கடியும் கட்டண அதிகரிப்பும் மட்டுமே ஏற்படும் ஆனால் கடல் வளத்தை விற்றால் மீனவர்களின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாகிவிடும்.

இவற்றின் அடிப்படையில் நான் கூறுவது இலங்கை, வெளிவிவகார அமைச்சின் கூற்றை வடக்கு மாகாண மீனவர்கள் கடுமையாகக் கண்டிக்க வேண்டும் என்பதோடு இதனை மீனவர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதனை தெளிவாக எடுத்துக் கூற வேண்டும். அதேபோல் இனி வரும் பேச்சுக்கள் 2016ஆம் ஆண்டு ஒப்பந்த அடிப்படையிலேயே நகர வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும். இலங்கை அரசு ஏன் அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் முன்னகரவில்லை என்பதை மீனவர்கள் வலுவான கேள்வியாக எழுப்பவேண்டும்.

அப்போதுதான் உங்கள் கருத்துகளையே புத்திஜீவிகளும் அரசியல்வாதிகளும் பிரதி பலிக்கும் நிலை வரும். இங்கே அனுமதி வழங்கப்படுவது ட்ரோலர் படகுகளுக்காக நாட்டுப் படகுகளுக்கா என்ற கேள்விக்கே இடமில்லை. அவற்றை அனுமதித்து அதன் பின்னர் இருதரப்பும் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்றால் இப்போதும் அந்தக் கண்காணிப்பை ஏற்படுத்த முடியும் - என்றார்.

## எதிர்க்கட்சித் தலைவர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலுக்கான தனது கண்டனத்தைத் தனது சமூக வலைத் தளங்களிலும் எதிர்க்கட்சித் தலைவர் உடனடியாகவே பதிவேற்றியிருந்தார்.

## உழவு இயந்திரக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு உயிரிழந்தார்.

சாரதியும் உயிரிழந்த இளைஞரும் உழவு இயந்திரத்தைப் பழுது பார்த்துக் கொண்டிருந்த வேளை, உழவு இயந்திரம் பின்புறமாக இயக்கப்பட்டமையால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் உடற்கூறாய்வுகளுக்காக தோப்பூர் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## ஊர்காவற்றுறையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் பட்டினி மற்றும் ஆதரவின்மை காரணமாகத் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த இருவரது உயிரிழப்புத் தொடர்பான உடற்கூறாய்வு ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. தீயினால் ஏற்பட்ட காயங்களால் உயிரிழப்பு நிகழ்ந்துள்ளதாகவே அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களின் இறப்புக்கு வேறு வெளிக் காரணங்கள் இருப்பதற்கான வாய்ப்புகள் தென்படவில்லை என்றும் மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன.

இதனையடுத்து அவர்கள் இருவரும் தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் என்கிற முடிவிற்கு பொலிஸார் வந்துள்ளனர். ஆதரவின்றித் தவித்து வந்த இருவரும் கடும் பட்டினி நிலையை எதிர்நோக்கியிருந்தனர் என்றும் அதன் காரணமாக அவர்கள் இந்தத் தவறான முடிவை எடுத்திருக்கக் கூடும் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மனுவேற்பிள்ளை அசலின் பௌலினா (வயது 79) அவரது தங்கையான யேசுதாசன் விக்ரோரியா (வயது 74) ஆகிய இருவரின் சடலங்களுமே சனிக்கிழமை ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் உள்ள வீட்டிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது. அவர்கள் உயிரிழந்து ஒரு சில நாட்கள் ஆகியிருக்கக்கூடும் என்றும் சடலத்தை நாய்கள் கடித்துக் குதறியதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். தலையில் மண்ணெண்ணெய்யை ஊற்றிக்கொண்டு நெருப்பு வைத்திருப்பதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## மீண்டும் மின்வெட்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறி மின் கட்டணத்தை அதிகரித்த போதிலும் அடுத்த மாதம் மின்வெட்டு இடம்பெறக்கூடும் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மின்சாரத்தை அவசரமாகக் கொள்வனவு செய்வதற்காக அதிகமான பணம் செலவாகின்றமை, நீர்த் தேக்கங்களில் நீர் மட்டம் 52 வீதத்தால் குறைந்துள்ளமை, சப்புகஸ்கந்த நிலையத்தால் மின்னுற்பத்தி செய்ய முடியாமை உள்ளிட்ட காரணிகளால் அடுத்த மாதம் மின்வெட்டு சாத்தியப்படலாம் என்று பொறியியலாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## 'மே 9' கலவர ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதானியாகவும் செயற்பட்ட சவேந்திர சில்வா எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அந்தக் கலவரம் தொடர்பான விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கலவரம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக முன்னாள் கடற்படைத்தளபதி வசந்த கரன்னகொட தலைமையில் மூவர் கொண்ட குழுவை அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்திருந்தார்.

அந்தக் குழு விசாரணைகளை நிறைவுசெய்து இப்போது அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையிலேயே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப் படை, அவசர சந்தர்ப்பத்தின்போது அழைக்கக் கூடிய இராணுவத்தின் கலகம் அடக்கும் பிரிவு, மொபைல் பாதுகாப்பு வாகனங்கள் ஆகிய வசதிகள் முகாமுக்குள் இருந்தும் கூட இவற்றைப் பாவிப்பதற்காக ஜெனரல் சவேந்திர சில்வா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு வழங்கவில்லை என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் சவேந்திர தொடர்பில் சி.ஐ.டி. விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்று அந்தக் குழு பரிந்துரைத்துள்ளது. இந்த அறிக்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதை நாடாளுமன்றில் வெளிப்படுத்துமாறு மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மொட்டுக் கட்சியைச் சேர்ந்த 115 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு ஜனாதிபதிக்கு இது தொடர்பில் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.

## மே 9 கலவரத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

7 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

தேசிய கணக்காய்வுத் திணைக்களத்தின் அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

2022 மே 9 ஆம் திகதி 'கோட்டா கோ ஹோம்', 'மைனா கோ ஹோம்' மீது மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து நாட்டில் கலவரம் வெடித்தது.

அந்தக் கலவரத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள், வாகனங்கள் உள்ளிட்ட சொத்துக்கள் எரிக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டார். அந்தக் கலவரத்தின்போதே இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 18 பஸ்களுக்கும் சேதம் ஏற்படுத்தப்பட்டது.






நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.


பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 14 ஞாயிற்றுக்கிழமை 26.02.2023 கதிர் 361


## 3 மாதங்களில் கியூஆர் விலக்கு

### அதிக விலையில் பெற்றோல் தாராளம்

அடுத்த 3 மாதங்களில் கியூ.ஆர். முறை இல்லாதொழிக்கப்படும் என்று தெரிவித்தார் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர. அதேநேரம் பெற்றோலின் விலை 10 முதல் 15 ரூபா வரையில் அதிகரிக்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

பெற்றோல் விலை தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், எதிர்காலத்தில் பெற்றோல் விலையை சிறிது அதிகரிக்கவேண்டி வரலாம்,

2

## தேர்தலை நடத்த வலியுறுத்தி

# அரசை எதிர்த்து கொழும்பில் அலையெனத் திரண்ட மக்கள்

### தேசிய மக்கள் சக்தியின் போராட்டத்தின் மீது நீர்த்தாரை தாக்குதல்; கண்ணீர் புகைக்குண்டு வீச்சு





'தேர்தலைப் பிற்போடுகின்ற சூழ்ச்சிக்கு எதிரான எதிர்ப்பு' என்ற தொனிப்பொருளில் கொழும்பில் இன்று அரசுக்கு எதிராகத் தேசிய மக்கள் சக்தியினர் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தி வருகின்றனர்.

2

### இலங்கைக் கடல் எல்லைக்குள் மீன்பிடிக்க

## இந்திய மீனவருக்கு அனுமதி வழங்கும் முடிவை மீள்பரிசீலனை செய்யுங்கள்

### வடக்கு மீனவர் அமைப்புக்கள் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.26

இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்களுக்கு மீன்பிடிக்க அனுமதி வழங்குவது என்ற அரசின் முடிவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக மீளாய்வு செய்யவேண்டும், அது தொடர்பில் நேரில் பேச மீனவர் அமைப்புக்களுக்கு ஜனாதிபதி ஒரு நேரம் ஒதுக்கித் தரவேண்டும் என்று கோரும் கடிதம் ஒன்று ஜனாதிபதிக்கு அனுப்பப்படுகின்றது.

வடக்கில் உள்ள மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் இன்று யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடிப் பேசிய பின்னர் ஜனாதிபதிக்கு இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்தனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களின் மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் இன்று காலை கூடி மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்பே ஜனாதிபதிக்கு இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர். அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த பல வருடங்களாக இலங்கை கடற்பரப்பிற்குள்ளே அத்துமீறித் தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் தொடர்பாக வடக்கு கடற்றொழில் சமூகம் பல்வேறு போராட்டங்களையும் நடத்தி எங்கள் எதிர்பைத் தெரிவித்த அதேநேரம் தங்களின் கவனத்தையும் ஈர்த்திருக்கின்றோம். தாங்கள் பிரதமராக பதவி வகித்த கடந்த ஆட்சிக் காலலத்தில், 2016ஆம் ஆண்டு, வெளிவிவகார அமைச்சு மட்டத்திலே இருநாடுகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுக்களில் எட்டப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றி முன்கொண்டு சென்று நிரந்தர தீர்வை வழங்குவீர்கள் என்று நாம் எதிர்பார்த்திருந்தோம்.

ஆனால், கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி இந்திய மீனவர்களுக்கு இலங்கைக் கடலில் மீன்பிடிக்க

2

## பிரதமர் பதவியிலிருந்து தினேஷ் விலகமாட்டார்

### ஊடகப் பிரிவு விளக்கம்



தமது பதவியில் இருந்து பிரதமர் தினேஷ்குணவர்த்தன விலகவுள்ளதாக வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது என்று பிரதமரின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

அவ்வாறே, பதவியிலிருந்து விலகுமாறு எந்தத் தரப்பினராலும் கோரிக்கையோ அல்லது அழுத்தமோ பிரதமருக்கு வழங்கப்படவில்லை என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான வதந்திகள், இந்த அரசின் திட்டங்களை நாசப்படுத்துவதற்கான சதித்திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்றும் பிரதமரின் ஊடக பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவைப் பிரதமராக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றதுஎனஉறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளியாகிருந்தன.

இந்தநிலையிலேயே, இவ்வாறானதொரு அறிவிப்பை பிரதமரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளது.

## போதைப்பொருட்களுடன் 15 இளைஞர்கள் சிக்கினர்

சிவனொளிபாதமலையேறுவதற்குப் பல் வேறு வகையான போதைப்பொருட்களுடன் வருகை தந்த 15 இளைஞர்கள் கடந்த இரு நாட்களுக்குள் ஹட்டன் பொலிஸின் போதை ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன் ரயில் நிலைய வளாகத்தில் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே, ரயிலில் வந்த குறித்த இளைஞர்கள், பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர்.

கொழும்பு, காலி, அநுராதபுரம் மற்றும் குருணாகலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 20 முதல்

2

## அடுத்த வாரம் முதல் தொடர் போராட்டம்

### பேராசிரியர் ஜி.எல்.பீரஸ் அறிவிப்பு

ஜனாதிபதியின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளை எதிர்த்து மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அடுத்த வாரம் முதல் அரசுக்கு எதிராகத் தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரஸ் தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் குறித்து செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பிற்கு முரணான ஜனாதிபதியின் செயற்பாட்டுக்கு இடமளித்தால் நாட்டில் கடும் மோசமான விளைவுகள் ஏற்படும்.

நாட்டை சீரழித்து அரசமைப்பை பாதுகாக்க முடியாது, பொருளாதார மீட்சிக்கே முன்னுரிமை வழங்குவேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டதை கொண்டு அவர் அரசியலமைப்பிற்கு அமைய செயல்படமாட்டார் என்பது தெளிவாக விளங்குகிறது.

இதுவரை பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட நாடுகளில் எவையும் அரசமைப்பிற்கு முரணாகச் செயற்பட்டு, ஜனநாயகத்தை படுகொலை செய்து பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீளவில்லை. சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளை சிறந்த உதாரணமாக குறிப்பிட முடி யும்.

ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவிற்கு மக்களாணை கிடையாது, அதனால் அவர் தேர்தலுக்கு தயார் இல்லை பொருளாதாரப் பாதிப்பு என குறிப்பிட்டுக் கொண்டு தேர்தலை

2

## மின்னல் தாக்கி கணவன் சாவு மனைவி காயம்

மின்னல் தாக்கியதில் கணவன் உயிரிழந்தார் மனைவி படுகாயமடைந்தார்.

இந்தச்சம்பவம் இரத்தினபுரி – தெல்வல, பெபோட்டுவ பகுதியில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் நடந்த நேரத்தில் குறித்த தம்பதியினர் ஒரு உலோக வாளியைப் பயன்படுத்தி வீட்டுக்கு வெளியே குளித்துக்கொண்டிருந்துள்ளனர். அதுவே மின்னல் தாக்குவதற்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் 42 வயதான கணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். 36 வயதான மனைவி படுகாயத்துடன் இரத்தினபுரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## பொலிஸாரின் தாக்குதலில் 10 பேர் காயம்

கொழும்பில் தேசிய மக்கள் சக்தியின் ஆர்ப்பாட்டப் பேரணியின் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலின் போது 10 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் தற்போது, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துமாறு கோரி தேசிய மக்கள் சக்தியினர் கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்து வருகின்றனர்.

இதனால், கொழும்பு தாமரைத் தடாகம் முதல் நகர மண்டபம் வரையான வீதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், ஆர்ப்பாட்டத்தை கலைக்கப் பொலிஸாரால் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, காயமடைந்த 10 பேரே இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## மூன்றுமுறிப்பு விபத்தில் 3 பிள்ளைகளின் தந்தை பரிதாபமாக உயிரிழப்பு

வவுனியா, மூன்று முறிப்பில் இன்று இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

ஏ9 வீதியில் பயணித்துக்கொண்டிருந்த துவிச்சக்கர வண்டியை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த பேருந்து மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது. பேருந்து மோதிய வேகத்தில் நிலைகுலைந்த குடும்பஸ்தர் பேருந்தின் சில்லுக்குள் வீழ்ந்து நசியுண்டதில் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் 40 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தையாவார். விபத்தைத் தொடர்ந்து அவரை வவுனியா வைத்தியசாலைக்குக் எடுத்து விரைந்தபோதும்

2

## இந்திய மீனவர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதி வழங்குவது குறித்துத் தெரிவித்திருந்தார். இது வடக்கு கடற் றொழிலாளர்களிற்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்திய இழுவைப் படகுகளால் எங்களுடைய கடல் வளமும், வாழ்வாதாரமும் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளது. பல கோடி ரூபா சொத்துக்களும் இழக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் இலங்கைக் கடல் எல்லைக்குள் அவர்கள் மீன்பிடிப்பதற்கு அனுமதிப்பது எமக்குச் சாவு மணி அடிப்பதற்கு ஒப்பானது.

எனவே இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக தங்களுடன் நேரில் சந்தித்து கலந்துரையாட ஆவலாய் உள்ளோம். அதற்கான நேரத்தை ஒதுக்கித் தரவேண்டுகின்றோம். அதற்கிடையில் இலங்கையின் இறமை உள்ள கடல் பகுதியில் வெளிநாட்டு மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்குவதை மீள்பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றுள்ளது.

முன்னதாக இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதி வழங்குவதை எப்படி எதிர்ப்பது என்பது தொடர்பில் வடக்கு மீனவ அமைப்புக்கள் யாழ். நகரிலுள்ள பிள்ளையார் இன் விடுதியில் கூடிக் கலந்துரையாடின.

அரசின் இந்த முயற்சிக்கு மீனவர் அமைப்புக்கள் கடும் கண்டனம் தெரிவித்தன.

20 வருடமாக எமது கோரிக்கைக்குச் செவிசாய்காது எமது வளத்தை தாரை வார்ப்பதற்கு இலங்கை ஆட்சியாளர்கள் முயற்சிக்கின்றனர் என்று மீனவர்கள் சாடினர்.

கச்சதீவில் 3ஆம் திகதி இடம்பெறவுள்ள அந்தோனியார் திருநாளையொட்டி அங்கு செல்லும் கடற்றொழில் அமைச்சரும் அவரால் அழைத்துச் செல்லப்படவுள்ள சில மீனவர் சங்கங்களும் இந்தியாவில் இருந்து வரும் மீனவர் சங்கங்களோடு பேசி ஓர் இணக்கம் ஏற்பட்டதாகக் காட்டுவதற்கான இரகசிய முயற்சிகள் இடம்பெறுகின்றனர் என்றும் கூட்டத்தில் குற்றஞ்சாட்டப்பட்டது.

''தமிழக மக்களிற்கும் எமக்கும் உள்ள தொப்புள்கொடி உறவு என்பது வேறு தொழில் என்பது வேறு; அதனை விட்டுக்கொடுக்கமுடியாது" என்று கூட்டத்தில் தெரிவித்தார் ஊர்காவற்றுறை மீனவ அமைப்பின் பிரதிநிதி அன்னராசா.

இந்திய மீனவர்கள் அத்துமீறல் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் இந்தியத் தரப்புக்களுடன் பல முறை பேசினோம். நாம் பாதிக்கப்படும் போதெல்லாம் தமிழ்நாடு எமது பசிபோக்க உதவியிருக்கின்றது. அதற்கு நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். அதேநேரம் இப்போது எமது வளத்தை எம்மிடமிருந்து பிடுங்குவதற்கும் முற்படுகின்றார்கள். அதனைக் கண்டிக்கின்றோம். இந்திய மீனவர்களுக்கு இலங்கைக் கடற்பரப்பில் அனுமதி வழங்கினால் அதனால் பாதிப்பு வடக்கு மீனவர்களுக்கே. அதனால் இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றார் மன்னார் மாவட்ட மீனவர் சங்கப் பிரதிநதியான ஆலம்.

## 3 மாதங்களில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அது உடனடியாக இல்லை – என்று தெரிவித்தார்.

உக்ரைன் – ரஷ்யா போர் போன்ற காரணங்களால் பெற்றோல் விலை உயர்வு தவிர்க்க முடியாததாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இந்தப் போரால் பெற்றோல் விலை குறைவதற்கான சாத்தியக்கூறுகளும் கேள்விக்குறியானது என்றார் அவர்.

அடுத்த மூன்று மாதங்களில் கியூஆர் முறை முற்றாக இல்லாதொழிக்கப்படும் எனவும் அதன் பின்னர் வழமை போன்று மக்களுக்கு எரிபொருள் கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

## போதைப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

30 வயதுக்குட்பட்ட இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோயின், கஞ்சா, கஞ்சா கலந்த புகையிலை தூள் மற்றும் சட்டவிரோதமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட்டுக்கள் என்பன கைதானவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்கள் ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர், அவர்களை எதிர்வரும் 28 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கட்டளையிட்டு, சரீரப் பிணையில் விடுக்கப்பட்டுள்ளனர்.

## அடுத்தவாரம்.....

நடத்தாமல் பலவந்தமான முறையில் அதிகாரத்தில் இருக்க அவர் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போடும் சூழ்ச்சிகளை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளார்.

நாட்டு மக்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த ஜனநாயக ரீதியில் இடமளிக்காவிட்டால் நாட்டு மக்கள் ஜனநாயகத்திற்கு எதிரான வழிமுறையில் தங்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்து–வார்கள்.

நிறைவேற்றுத்துறை அதிகாரம் தேர்தல் உரிமையை பறிக்கும் போது நாட்டில் பெரும் எதிர்வினைகள் உருவாகும். 30 வருட காலம் தொடர்ந்த போர் இவ்வாறான பின்னணியில்தான் தோற்றம் பெற்றது என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஜனநாயகத்திற்கு எதிரான செயற்பாட்டுக்கு இடமளித்தால் நாடு பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும்.

எனவே ஜனநாயகம் மற்றும் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்க அடுத்த வாரம் முதல் அரசியல் ரீதியான போராட்டத்தில் ஈடுபடுவோம் – என்றார்.

## மூன்று முறிப்பில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரைக் காப்பாற்ற முடியவில்லை

இதேவேளை, இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்து ஆகியன போட்டிக்கு ஓடியபோதே இந்த விபத்து நிகழ்ந்ததாக பேருந்தில் பயணித்தவர்கள் தெரிவித்தனர்.

## அரசை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'தேர்தலைப் பிற்போடுகின்ற சூழ்ச்சிக்கு எதிரான எதிர்ப்பு' என்ற தொனிப்பொருளில் கொழும்பில் இன்று அரசுக்கு எதிராகத் தேசிய மக்கள் சக்தியினர் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தி வருகின்றனர். இதைக் கலைக்கப் பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டனர். எனினும் அதையும் மீறி போராட்டக்காரர்கள் தொடர்ந்து பேரணியாக முன்னேறி வருகின்றனர். அலையெனத் திரண்டு வந்திருக்கும் பெரும் எண்ணிக்கையான மக்களுடன் போராட்டம் நடக்கின்றது.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக கொழும்பு தாமரைத் தடாகம் முதல் நகர மண்டபம் வரையான வீதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டப் பேரணி காரணமாக அப்பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள வீதிகளில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் அக்கட்சியின் பிரதிநிதிகள் உள்ளிட்ட 26 பேருக்கு கொழும்பு வைத்தியசாலை சதுக்க வலயத்துக்குள் பிரவேசிக்க, மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

அதன்படி, தேசிய வைத்தியசாலை, கண் வைத்தியசாலை, இருதய வைத்தியசாலை மற்றும் மருதானை பிரதான வைத்தியசாலைசதுக்கங்களின்செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கக் கூடிய வகையில் போராட்டக்காரர்கள் அருகில் உள்ள பகுதிகளுக்குள் பிரவேசிப்பதைத் தடுக்கும் வகையில் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

லிப்டன் சுற்றுவட்டத்திலிருந்து டீன்ஸ் வீதி, சீமன்ஸ் வீதி சந்தி வரையிலான வீதி மற்றும் நடைபாதைகளை மறித்து பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் நடத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தடை உத்தரவு பெறப்பட்டுள்ளபோதும் ஜேவிபி தலைவர் அனுரகுமார திஸநாயக்க உள்ளிட்ட கட்சியின் முக்கிய தலைவர்கள் போராட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

# காணாமற்போன மீனவரின் சடலம் இன்று மூதூரில் மீட்பு

திருகோணமலை மாவட்டம் மூதூரில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற பின்னர் காணாமற்போன மீனவரின் சடலம் இன்று மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மூதூர் – பஹ்ரியா நகரைச் சேர்ந்த 35 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையெனத் தெரியவருகின்றது.

வெள்ளிக்கிழமை அதிகாலை நான்கு மணியளவில் மீன் பிடிப்பதற்காகப் புறப்பட்டுச் சென்றவர் வீடு திரும்பவில்லை. கிராம மக்களின் உதவியுடன் மீனவர்கள் அவரைத் தேடி வந்தனர்.

இந்நிலையில் அவரது சடலம் கடலில் மிதந்த நிலையில் இன்று கண்டுபிடிக்கப்பட்டது. மூதூர் திடீர் மரண விசாரணை அதிகாரி முகம்மது யூசுப் லாபீர் சடலத்தைப் பார்வையிட்டு விசாரணை செய்த பின் உறவினர்களிடம் ஒப்படைத்தார்.

அவரது இறப்பிற்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை.

# வெடிப்புச் சம்பவத்தில் தம்பதியினர் படுகாயம்

குப்பைகூழமொன்றில் ஏற்பட்ட திடீர் வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்த இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் மொரட்டுவை-கல்தே முல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று கல்கிஸை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் தம்பதியினரே காயமடைந்துள்ளனர் என்றும், அவர்களது மகளின் முறைப்பாட்டின் அடிப்படையில் சம்பவஇடத்துக்குச் சென்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

முறைப்பாட்டாளரின் தாயும் தந்தையும் தமது வீட்டுக்கு அருகில் உள்ள குப்பை மேட்டில் தீ வைத்தனர் என்றும், அங்கு பெரும் சத்தத்துடன் இனந்தெரியாத பொருள் ஒன்று வெடித்தது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெடிப்புச்சம்பவத்தில் பெண்ணின் இடுப்பு மற்றும் கைகளில் காயம் ஏற்பட்டது என்றும், ஆணின் இரண்டு கால்களிலும் காயம் ஏற்பட்டது என்றும் பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழ் மக்களின் தலைவர் யாரோ அவரே அங்கஜனுக்கும் தலைவர்

## மைத்திரி வெறும் கட்சித் தலைவர்தான் என்கிறார்

தென்மராட்சி, பெப். 26

தமிழ்மக்களுடையதலைவர் யாரோ அவரே எனது தலைவரும்கூட.மைத்திரிபால சிறிசேன எனது கட்சித் தலைவராக மாத்திரமே உள்ளார்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்.

அண்மையில் கைதடி பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தலைமை அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

தலைவர் போராட்டத்திற்கு அழைத்தபோது சிலர் அந்த போராட்டத்திற்கு பலம் சேர்க்காமையால்தான் போராட்டம் மௌனித்தது. அன்று போராடியவர்கள் அமைதியாக இருக்கும் வேளையில் போராட்டத்திற்கு பலம் சேர்க்காதவர்கள் அரசியல் சுயலாபம் கருதி இன்று நாடகம் நடத்தி வருகின்றனர். இதனை நான் ஒரு மேடையில் சொல்லியிருந்தேன். நான் அங்கு எவரையும் பெயர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஆனால் தொப்பி அளவானவர்கள் அதனை போட்டுக் கொண்டு சில கருத்துக்களை எனக்கு எதிராக முன்வைக்கின்றனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிங்கள கட்சி என்று கூறியிருக்கிறார். அவர்களுடைய கட்சியைச்சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் அங்கஜனுடையதலைவர்யாரென்று கூற வேண்டும் எனவும் கேட்டிருக்கிறார்.



உங்கள் எல்லோருக்கும் யார் தலைவரோ எனக்கும் அவரே தலைவர்.எப்போதுமே அவர் தான் தலைவராக இருப்பார்.கட்சிக்கு மாத்திரமே மைத்திரிபால சிறிசேன தலைவராக இருந்து வருகிறார்.

கஜேந்திரகுமார் அவர்களின் தகப்பனார் எமது கட்சியின் முன்னாள் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையாரை தனது தாயார் என கொழும்பில் வைத்து ஒரு கூட்டத்தில் கூறியிருக்கிறார்.

அனுர பண்டாரநாயக்க உங்கள் வெள்ளை மகன் எனவும்–நான் உங்கள் கறுப்பு மகன் எனவும் அன்று அவர் மேடையில் வைத்து கூறியிருக்கிறார்.நாங்கள் கட்சிக்கு மாத்திரமே அவர்களை தலைவர்களாக கொண்டுள்ளோம். ஆனால் இவர்கள் தமது தாயாராகவே அந்தக் கட்சியின் தலைவரை ஏற்றுக்கொண்டவர்கள்.

நான் எவரையும் எனக்குப் போட்டியாக எடுத்துக்கொள்வதில்லை. நான் கடந்த காலத்தில் செய்த மக்கள் நலன்சார்ந்த வேலைத்திட்டத்தை பன்மடங்கு அதிகரிக்க வேண்டும் என்பதே எனது ஒரே நோக்கம்.என்று அவர் தெரிவித்தார்.

# போதைக் கடத்தல் கும்பலின் கார் பொத்துவிலில் சிக்கியது

## அதிலிருந்து ஏயார் ரைபிளும் மீட்பு

(பாரூக் ஷிகான்)

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த முக்கிய புள்ளியான கிம்புலா எல குணாவின் சகா பயன்படுத்தினார் என்று சந்தேகிக்கப்படும் கார் ஒன்றை கல்முனை தலைமையகப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த நபர் ஒருவர் இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல முற்படுகையில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் பொத்துவிலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்தக் கார் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட கார் கிம்புலா எல குணாவின் நெருங்கிய சகா ஒருவரால் பயன்படுத்தப்பட்டது என்று பொலிஸார் கூறுகின்றனர்.

குணாவின் கும்பல் போதைப் பொருட்களைக் கடத்துவதற்கும் கொலை உள்ளிட்ட திட்டமிட்ட குற்றங்களில் ஈடுபடுவதற்கும் இந்த விலையுயர்ந்த காரைப் பயன்படுத்தி வந்திருக்கலாம் அப்படிக் குற்றச்செயல்களில் மாட்டிக்கொண்டபின்னர் அதனை மறைத்து வைத்திருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் மூன்றாவது மனைவி எனக்கருதப்படுபவரின் வீட்டிலேயே இந்தக் கார் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. பொலிஸார் அதைக் கைப்பற்றியபோது அதில் இருந்து ஏயார் ரைபிள் ஒன்றையும் மீட்டனர். சொகுசு கார்களில் போதைப் பொருட்களைக் கடத்தி வந்தார்கள் என்கிற குற்றச்சாட்டிலேயே கட்டுநாயக்கா விமானநிலையத்தில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவருக்கு முன்பாக மேலும் இருவரையும் இதே குற்றச்சாட்டில் பொலிஸார் கைது செய்திருந்தனர். மூவரையும் வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முற்படுத்தியபோது மார்ச் 3ஆம் திகதி விரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

# சம்மாந்துறை நெல்வயல்களுக்கு படையெடுத்து வரும் யானைகள்

(பாரூக் ஷிகான்)

சம்மாந்துறையில் அறுவடை இடம்பெற்றுவரும் நிலையில் வயல் நிலங்களுக்குள் யானைகள் புகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. சனிக்கிழமை காலை மூன்று இடங்களில் 30க்கும் மேற்பட்ட யானைகள் கூட்டமாக வயல் நிலங்களுக்குள் நுழைய முயற்சித்துள்ளன. விவசாயிகளும் பொதுமக்களும் இணைந்து அவற்றை விரட்டியடித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அறிந்த சம்மாந்துறை பிரதேசசபையின் தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் மாலை வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்களுடன் குறித்த இடத்திற்கு சென்று நிலமைகளை ஆராய்ந்தார்.

சம்மாந்துறையில் வெள்ளிக்கிழமை வயல் நிலத்திற்குள் புகுந்த யானை ஒன்று தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தார். மூன்று பேர் காயமடைந்திருந்தனர். இந்தச் சம்பவம் இடம்பெற்று ஒரு நாளின் பின்னர் யானைகள் கூட்டமாக வயல் நிலங்களுக்குள் நுழைய முயன்றுள்ளன.

யானையால் தாக்கப்பட்டு விவசாயி உயிரிழந்ததைத் தொடர்ந்து யானைகளைக் கட்டுப்படுத்துவதது தொடர்பான அவசர கலந்துரையாடல் அம்பாறை மாவட்டச் செயலர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் சம்மாந்துறை பிரதேசசபை தவிசாளர் ஐ.எல்.எம். மாஹிர், சம்மாந் துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா, வன உயிரிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் மாவட்ட உதவிப்பணிப்பாளர் பிரசாந்த, மாவட்ட பேரிடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப்பணிப்பாளர் எம்.சீ.எம். றியாஸ், வனஉயிரிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களான ஜெகதீஸ், சுரேஸ்குமார் , சிசிர காமினி , கித்சிறி மெமன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

பொதுமக்களுக்கும் விவசாயிகளுக்கும் சேதம் ஏற்படுத்தும் குறித்த ஒரு யானையைத் தாம் இனங்கண்டுள்ளனர் எனவும், அதனை வனவிலங்கு சரணாலயத்திற்கு ஏற்றி செல்லுவதற்கான நடைவடிக்கையை எடுப்பதாக வும் வன உயிரிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். விவசாய நடவடிக்கை முடியும் வரை வனவிலங்கு பாதுகாப்பு செயலணியும் சிவில் பாதுகாப்பு படையும் இணைந்து விவசாயிகளின் பாதுகாப்பை வயல் நிலப் பகுதிகளில் உறுதிப்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதன் பின்னரே யானைகள் கூட்டமாக வயல்நிலங்களுக்குள் நுழைய முயன்றுள்ளன. இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கும் விவசாயிகளையும் வயல்நிலங்களையும் ஊர் மக்களையும் பாதுகாப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கும்படியும் மேற்கொண்டு யானைகளை காட்டுப்பகுதிக்குள் அனுப்புவதற்கு ஒத்துழைக்குமாறும் சம்மாந்துறை பிரதேச சபைத் தலைவர் வன உயிரிகள் திணைக்களத்தினிடம் கேட்டுக்கொண்டார்.



# மட்டக்களப்பில் இன்று இரு நூல்கள் வெளியீடு

(பழுவூரான்)

கிழக்கு மண்ணில் தமிழ் மணம் பரப்பிக் கொண்டிருக்கும் மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் சிரேஷ்ட எழுத்தாளர் கலாபூணம் ஆ.மு.சி வேலழகன் எழுதிய அலகுடை நீழலவர் (குறுநாவல்) மற்றும் உருவங்கள் மானிடராய் (கவிதைத் தொகுப்பு– மறு பதிப்பு) ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்றது.

சங்கத் தலைவர் சைவப்புலவர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்குப் பல்கலைக்கழக ஆங்கில மொழித் துறைப் பேராசிரியர் ஜீவரெத்தினம் கென்னடி முதன்மை அதிதியாகவும், மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பொறியியலாளர் குழந்தைவேல் வில்வராஜன் சிறப்பு அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வின் முக்கிய அணிகலனான நூல் வெளியீடு அரங்கேறியது. முதல் பிரதியினை திருப்பழுகாமம் கிராமசபை முன்னாள் தலைவர் க.இராசரெத்தினம் மற்றும் பொறியியலாளர் இளங்கலைஞர் அமரசிங்கம் குணசிங்கம் ஆகியோர் இணைந்து பெற்றுக் கொண்டனர்.

அலகுடை நீழலவர் (குறுநாவல்) நூலுக்கான நயவுரையை கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் கற்கைகள் துறை விரிவுரையாளர் கலாநிதி த.மேகராசாவும், உருவங்கள் மானிடராய் (கவிதைத் தொகுப்பு– மறுபதிப்பு) நூலுக்கான ஆய்வுரையை கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் து.கௌரீஸ்வரனும் நிகழ்த்தினர்.

அத்தோடு சிறப்புரையை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கச் செயலாளர் சட்டத்தரணி மு.கணேசராசாவும், ஏற்புரையினை நூலாசிரியர் சார்பாக மட்டக்களப்பு பெரியபோரதீவு பாரதி வித்தியாலய அதிபர் கணபதிப்பிள்ளை பிரபாகரனும், நன்றியுரையினை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் துணைச் செயலாளர் பிரியா கருணாகரனும் நிகழ்த்தினர். நிகழ்ச்சித் தொகுப்பை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்க செயற்குழு உறுப்பினர் கதிரவன் தங்கராசா இன்பராசா சுவைபட வழங்கியிருந்தார்.









# பொதுமக்களுக்கான மனிதாபிமான பணியில் அரச உத்தியோகத்தர்கள் ஈடுபடவேண்டும்

## குருதிக்கொடைக்கு அழைப்பு விடுக்கிறார் யாழ்.மாவட்டச் செயலர்

அரச பணியாளர்கள் தமது அலுவலகப் பணிகளுக்கு அப்பாலும் பொதுமக்களுக்கான மனிதாபிமான பணிகளை ஆற்றுவதற்கு முன்வரவேண்டும், அந்த வகையில் அரச பணியாளர்கள் அனைவரும் குருதிக்கொடைக்கு முன்வரவேண்டும் எனத் தெரிவித்தார் யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன்.

மக்களுக்கு நேர்மையான முறையில் பணியாற்றுவதன் மூலமே சேவையில் இருந்து ஓய்வுபெறும்போது மனத் திருப்தியுடன் செல்ல முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தால், அரச உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறண்தடைகாண்பரீட்சைக்கானவழிகாட்டல் செயலமர்வு நல்லூர் பிரதேச செயலகத்தில் ஞாயிற்றுக்கிழமை தொடங்கப்பட்டது. அதில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மாவட்டச் செயலர் இவ்வாறு தெரிவித்தார்.

சங்கத் தலைவர் வி.விஜயரூபன் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில் யாழ்.மாவட்டத்தின் பல பிரதேச செயலகங்களில் இருந்தும் நூற்றுக்கணக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்ததாவது:

அரச பணியாளர்கள் அலுவலக நேரங்களில் மக்கள் சேவையில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். அரச பணியாளர்கள் அலுவலகங்களில் வீண் பொழுது போக்குகின்றார்கள் என்ற எண்ணம் மக்கள் மனங்களில் ஏற்படக்கூடாது. அலுவலகத்திற்கு வருகின்ற வயோதிபர்கள் விடயத்தில் கூடிய கவனம் எடுக்கவேண்டும்.

அரச பணிக்கு வருகின்ற அனைவரும் ஏதோ ஒரு துறையில் படித்தவர்கள். அவர்களிடம் பண்பாகச் செயற்படவேண்டும். பொதுமக்கள் மனங்களில் இடம்பிடிக்கத்தக்க செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும். அரச பணியாளர்களோ, ஆசிரியர்களோ வேறேந்த துறைசார்ந்தவர்களோ தமது பணியுடன் மட்டும் நின்றுவிடாமல் மக்களுக்கான மனிதாபிமான செயற்பாடுகளிலும் ஈடுபடவேண்டும்.

யாழ். மாவட்டத்தில் குருதிக்கு தட்டுப்பாடு உள்ளது. இதனால் நாம் மற்றவர்களிடம் கையேந்த வேண்டிய நிலை ஏற்படக்கூடாது. யாழ். மாவட்டத்தில் உள்ள அரச பணியாளர்கள் குருதிக்கொடை செய்வதற்கு முன்வரவேண்டும். வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் இப்பணியை மேற்கொள்ள வேண்டும். மக்கள் சேவை மகேசன் சேவை என வாய்வழியாகக் கூறிவிட்டு இருக்காமல் அதைச் செயலில் காட்டவேண்டும். – எனத் தெரிவித்தார்.

இந்தச் செயலமர்வில் யாழ். மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன், வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் பிரதிநிதிகள், வளவாளர்கள் உட்பட நூற்றுக்கணக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசு செலவை எங்கே குறைக்கவேண்டும்?

**பாகிஸ்தானும் இலங்கையைப் போன்றே பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டு தவிக்கின்றது. இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் பல்வேறு விடயங்களில் ஒற்றுமை இருக்கின்றது.**

**தேவை ஏற்படும்போது பன்னாட்டு செலாவணி நிதியத்திடம் (ஐஎம்எவ்) ஓடுவது. பணம் கிடைத்ததும் பின்னர் அதன் செயற்திட்டத்தில் இருந்து வெளியேறுவது, அபிவிருத்தித் திட்டங்களுக்கு யார் பணம் தந்தாலும், எவ்வளவு பணம் தந்தாலும், அதற்கு எவ்வளவு வட்டி என்றாலும் அதனைப் பெற்றுக்கொண்டு கன்னாபின்னாவென்று செலவிடுவது, தேசிய உற்பத்தி வருவாயை உயர்த்துவதற்கான வழிவகைகள் குறித்துச் சிந்திக்காமல் கடன் வாங்கிய பணத்திலேயே காலத்தை ஒட்டுவது, பின்னர் கடனைக் கட்டுவதற்குக் கடன் வாங்குவது என்று இரு நாடுகளும் ஒரே மாதிரியாகத்தான் செயற்பட்டு வந்தன.**

**இப்போது பாகிஸ்தானும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டுள்ளது. அங்கேயும் கட்டுப்பாடுகள் இறுக்கப்பட்டுள்ளன. அரசின் செலவுகளைக் குறைக்கும் வழிகள் குறித்து தீவிரமாக ஆராயப்படுகின்றன. அவற்றில் சில நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இன்னும் சிலவற்றை விரைவில் நடைமுறைப்படுத்தப்போவதாக அறிவித்துள்ளனர்.**

**அப்படி அறிவிக்கப்பட்டவுள்ள செலவுக் குறைப்பு நடவடிக்கைகளில் ஒன்றாக அமைச்சர்களின் ஊதியத்தையும் குறைக்க பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது.**

**பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், அமைச்சர்கள், அரசு ஆலோசகர்களின் செலவுகளை 15 சதவீத அளவுக்கு குறைத்து ஆண்டுக்கு ரூ. 6 ஆயிரம் கோடி அளவுக்கு மீதப்படுத்த பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.**

**அதுவும்போக பாகிஸ்தான் அமைச்சர்கள் அலுவலக ரீதியாக பயணம் செல்லும்போது, வானூர்திகளில் அதிக கட்டணங்கள் வசூலிக்கும் வகுப்புகளில் பயணிக்கவும், 5 நட்சத்திர விடுதிகளில் தங்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.**

**இவை எல்லாம் அரசின் செலவுக் குறைப்பு நடவடிக்கைகளின் முன்மாதிரி. ஆனால் இலங்கையில் என்ன நடந்தது, இதுபோன்ற கட்டுப்பாடுகள் எல்லாம் அரச அதிகாரிகளுக்கு விதிக்கப்பட்டன. ஆனால் ஆட்சியாளர்களுக்கு எந்தவிதமான செலவுக் குறைப்பு நடவடிக்கைகளும் கிடையாது. இன்னும் சொல்லப்போனால் அமைச்சரவையை இன்னும் விரிவாக்கி செலவுகளை அதிகரிக்கும் திட்டத்தோடுதான் ஆட்சியாளர்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.**

**அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியில் எந்த வெட்டும் கிடையாது. அல்லது கடந்த ஆண்டு வழங்கப்பட்டதைவிட இன்னும் கொஞ்சம் அதிகமாகவே வழங்கப்பட்டுள்ளது. இப்படி முன்னுதாரணமாகத் திகழவேண்டியவர்களே தவறான முன்னுதாரணங்களாக இருந்தால் நாடு எப்படி பொருளாதார மீட்சியை அடையும்?**

**முதலில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரது சம்பளம் உள்ளிட்ட கொடுப்பனவுகளையும் பாதியாக வெட்டிக்குறைத்து மக்களுக்கு முன்னுதாரணமாக நடந்துகொள்ள ஆட்சியாளர்கள் முன்வரவேண்டும். அதன் பின்னரே அரசின் மற்றைய துறைகளில் செலவுக் குறைப்பு மீது கண்வைக்கவேண்டும்.**

# தாயக உறவுகளின் பொருளாதார தன்னிறைவே புலம்பெயர்ந்த அன்பர்களின் இலட்சியக் கனவு

## பிரித்தானிய நாட்டு செயற்பாட்டாளர் மகேசன் தெரிவிப்பு







(து. தர்மேந்திரா)

தாயகத்தில் வாழ்கின்ற உறவுகள் பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைதல்வேண்டும் என்பதே புலம்பெயர் தமிழ் அன்பர்களின் இலட்சிய கனவு ஆகும் என்று புதிய வாழ்வு நிறுவனத்தின் புலம்பெயர் நாட்டு பணிப்பாளர்களில் ஒருவரான பிரித்தானியாவை சேர்ந்த சுப்பிரமணியம் மகேசன் தெரிவித்தார்.

இவருடைய பங்கேற்புடன் புதிய வாழ்வு நிறுவனத்தின் வேலை திட்டங்கள் பலவும் சூறாவளி வேகத்தில் வடக்கு, கிழக்கு மலையகம் முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் வறிய மற்றும் வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த வீட்டு தோட்ட முயற்சியாளர்கள் 150 பேருக்கு தலா 15,000 ரூபாய் பெறுமதியான ஊக்குவிப்பு திட்டம் இவருடைய சிந்தனையில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அம்பாறை மாவட்ட பயனாளிகளுக்கு இரண்டாம் கட்ட ஊக்குவிப்பை வழங்க நேரடி களப் பயணம் மேற்கொண்டு வந்த இவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தாயகத்தில் வாழ்கின்ற உறவுகள் பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைதல் வேண்டும் என்பது எம்போன்ற புலம்பெயர் அன்பர்களின் இலட்சிய கனவாகும்.

இன்னொருவரிடம் கையேந்தி வாழ்கின்ற நிலையில் இருந்து எம்மவர்கள் விடுபடுதல் வேண்டும். வேறு நபர்களிடம் வாழ்வாதாரம், பொருளாதாரம் ஆகியவற்றுக்காக தங்கி இருக்க கூடாது.

அதற்காக புலம்பெயர் தமிழர்களுக்கு வானத்தில் இருந்து நிதி ஒன்றும் கொட்டுவதில்லை. கஷ்டப்பட்டு உழைத்து சிறுக சிறுக சேர்க்கின்ற பணத்திலேதான் தாயக உறவுகளுக்கு உதவி செய்கின்றார்கள்.

எனவே எமது புலம்பெயர் அன்பர்களின் பகீரத முயற்சியில் கிடைக்கின்ற நிதி உதவிகள் மற்றும் ஊக்குவிப்புகளை தாயக உறவுகள் துஷ்பிரயோகம் செய்யவோ, வீண் விரயம் செய்யவோ கூடாது. இவற்றின் மூலம் உச்ச பலனை பெறுவதற்கு முயற்சித்து வெற்றி காணுதல் வேண்டும்.

## விவாதிகளுக்கு வாய்ப்பு

அருகிச் செல்லும் கலை, இலக்கிய நிகழ்வுகளை தலைநகரில் மேம்படுத்த வேண்டும் என்று நோக்கில் கலைஞர் ராதாமேத்தாவின் ஏற்பாட்டினில் பட்டிமன்றம் மற் றும் விவாத அரங்குகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. பட்டிமன்றத்தில் கலந்துகொண்டு தமது திறமைகளை வெளிக்கொணர விரும்புவோருக்கு வயதெல்லைகருத்தில்கொள்ளப்படமாட்டாது.

விவாத அரங்கில் கலந்து கொள்வோருக்குவயதெல்லை உண்டு. 16 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் 30 வயதுக்கு கீழ்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும்.

குறிப்பாகப் பாடசாலை விவாதக் குழுக்களில் கலந்து கொண்டிருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேலதிக விவரங்களைப் பெறுவதற்கு 076 2002701 என்ற அலைபேசி எண்ணுடனும் patmethagmail.com என்றமெயில் முகவரியுடனும் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் கோரிக்கை

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இருந்து வெளியிடப்பட்ட கலைமலர் சஞ்சிகையின் பிரதிகள் இருப்பின் கலாசாலை நூலகத்திற்கு வழங்கி உதவுமாறு கலாசாலை அதிபர் கோரியுள்ளார். கலாசாலை நூற்றாண்டைக் காணும் தருணத்தில் கலாசாலையுடன் தொடர்புடைய வெளியீடுகளை ஆவணப்படுத்தும் நோக்கில் இந்த உதவியை மேற்கொள்ளுமாறு கலாசாலையில் கற்ற முன்னாள் ஆசிரியர்கள் மற்றும் ஆர்வலர்களிடம் அதிபர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

1923 இற்கும் 1974 இற்கும் இடைப்பட்ட காலத்தில் வெளிவந்த வெளியீடுகள் பற்றிய தரவுகளோ அல்லது நூல்களோ கலாசாலை நூலகத்தில் இல்லை எனவும் அத்துடன் கலைமலர் 18, கலைமலர் 19 (1977 - 1978) கலைமலர் 22 (1981) கலைமலர் 28, கலைமலர் 29, கலைமலர் 30 (1990 - 1998 இடையில்) கலைமலர் 34 (2002) ஆகிய சஞ்சிகைகள் கலாசாலை நூலகத்தில் இல்லை எனவும் குறிப்பிட்ட அவர் இந்தப் பிரதிகள் எங்காவது இருப்பின் கலாசாலைக்கு (0212230323 என்ற இலக்கத்திற்கு) அறியத்தந் தால் அவற்றை வந்து பெற்றுக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

# நாவிதன்வெளியில் அரசு நெல்கொள்வனவு



(நூருல் ஹுதா உமர்)

இந்த ஆண்டிற்கான பெரும் போகத்தில் நெல் கொள்வனவு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் தலைமையில் மத்திய முகாமில் இடம்பெற்றது. இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிகச் செயலர் வி.ஜெகதீஸன் கலந்துகொண்டார். மதிப்புறு அதிதிகளாக அம்பாறை மாவட்ட விவசாய பணிப்பாளர் எம்.எஸ்.ஏ கலீஸ், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் நளீர் அபூபக்கர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## அனலைதீவு வாள் வெட்டுச் சம்பவம்

# பாதிக்கப்பட்டவரின் கால் சரியாக நீண்ட காலமாகும்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.26

அனலைதீவில் தங்கியிருந்த கனேடிய குடிமக்களின் இல்லத்திற்குள் நுழைந்து வாளால் வெட்டிவிட்டு பெருந்தொகைப் பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்தில் வாள் வெட்டுக்கு இலக்கானவரின் கால்கள் சரியாகி அவர் மீண்டும் எழுந்து நடமாடப் பல மாதங்கள் ஆகும் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட கனடா குடிமக்கள் இருவர் அனலைதீவில் தங்கியிருந்த வீட்டிற்குள் வெள்ளிக்கிழமை அதிகாலையில் கதவை உடைத்து உட்புகுந்த நால்வர் கும்பல் அங்கிருந்த கனேடியை வாளால் வெட்டி விட்டு அவர்களது பணம் மற்றும் கடவுச் சீட்டு என்பவற்றை களவாடிச் சென்றது.

இந்தச் செயலை செய்த தாக கூறப்படும் நால்வரும் கறுப்புத் துணியால் மூடியவாறு இந்தக் குற்றத்தைப் புரிந்தனர் என்று பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாத்தில் இருந்து பணிக்கமர்த்தப்பட்ட கூலிப் படையினரே படகில் வந்து இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டுத் திரும்பியிருக்கின்றனர் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். விசாரணைகள் தொடர்கின்றன.

இந்த தாக்குதலில் காயமடைந்த கனேடியக் குடிமகனின் ஒரு கால் கடும் காயத்திற்குள்ளாகியுள்ளது. மிக ஆழமான காயம் ஏற்பட்டுள்ளது. எலும்பு வரை வெட்டு ஆழமாகப் பாய்ந்துள்ளதால் கால் குணமாகி அவர் மீண்டும் இயல்பாக நடமாடப் பல மாதங்கள் ஆகும் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

## சிறுமியைத் துன்புறுத்திய குற்றச்சாட்டில் நபர் கைது

தென்மராட்சி, பெப். 26

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழிப் பிரதேசத்தில் 15வயதுச் சிறுமியை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என்றுபொலிஸார்தெரிவித்தனர். இந்தக் கொடுமையைச் செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் 19 வயது இளைஞன் ஒருவர்வெள்ளிக்கிழமைகைது செய்யப்பட்டார்.

சிவராத்திரி தினத்தன்று இரவு பெற்றோர் ஆலயத்திற்கு சென்றிருந்த வேளையில் வீட்டில் தனிமையில் இருந்த 15 வயதுச் சிறுமியிடம் சந்தேகநபர் வரம்புமீறி நடந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட இளைஞர் வவுனியாவைச் சேர்ந்தவர்.

துருக்கி - சிரிய நிலநடுக்கத்தால்

# இறந்தோர் எண்ணிக்கை 50 ஆயிரத்தைக் கடந்தது

துருக்கி, சிரியாவில் பெப்ர வரி 6ஆம் திகதி ஏற்பட்ட அதிபயங்கர நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண் ணிக்கை சனிக்கிழமை 50 ஆயிரத்தைக் கடந்தது.

சிரியா எல்லையையொட் டிய துருக்கியின் காஸியான் டெப் நகரில் ஏற்பட்ட அந்த நிலநடுக்கம் ரிச்டா அளவு கோலில் 7.8 அலகுகளாகப் பதிவானது.

அதில் துருக்கியின் தெற்கு ம ற்றும் மத்திய பகுதியிலும் சிரிய-ாவின் வடக்குப் பகுதியி லும் ஆயிரக்கணக்கான வீடுகள் தரைம ட்டமாகின.

இதில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சனிக்கிழமை 50,970 ஆக உயாந்தது.

சனிக்கிழமை இரவு நிலவரப்படி, துருக்கியில் 44,210 பேரும், சிரி யாவில் 6,760 பேரும் நிலநடுக்கத்தால் உயிரிழந்தனர். இரு நாடுகளிலும் சுமார் ஒரு லட்சத்து 22 ஆயிரத்து 500 போ காயமடைந்துள்ளனா என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக் கின்றன.

இதற்கிடையில் நிலநடுக்கத்தி ன்போது இத்தனை ஆயிரம் கட்டடங்கள் இடிந்து விழுந்ததற்குக் காரணம ானவர்கள் என்று குற்றஞ்சாட்டப்படும் 184 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நீதி அமைச்சர் தெரிவித்தார். அவர்களிடம் தொடர்ந்து விசாரணை கள் நடத்தப்படுகின்றன.

துருக்கி அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படும் பகுதியில் அமைந்துள்ளது. அங்கு நிலநடுக்கத்தைத் தாங்கும் வகையிலான கட்டடங்கள் அமைப்பதற் கென்ற நெறிமுறை கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து கட்டட நெறிமுறைகளை முழுமையாகப் பின்பற்றாமல் அடுக்குமாடித் தொடர்களை எழுப்பியதாலேயே இவ்வளவு பெரிய உயிரிழப்பு ஏற்பட்டது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இதன் காரணமாகவே கட்டட ஒப்பந்தக்காரர்கள், உரிமையாளர் கள் என 184 பேர் கைது செய்-யப்பட்டுள்ளனர்.

இடிபாடுகளுக்குள் சிக்கியி ருப்போரை மீட்கும் பணிகள் ஏற்கனவே கைவிடப்பட்டிருக்கின்றன என்றாலும் துருக்கியின் தேசிய தீயணைப்புப் படையினர் தொடர்ந் தும் கட்டட இடிபாடுகளுக்குள் இருந்த மனித உடற்பாகங்கள் மீட்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.



## ஐ.எஸ். அமைப்பின் கொடூர தாக்குதலில் மேற்கு ஆபிரிக்க நாட்டில் 70 பேர் இறப்பு

மேற்கு ஆப்பிரிக்க நாடான புர்கினா ஃபாசோவில் இஸ்லாமிய தேச (ஐஎஸ்) அமைப்பினர் நடத்திய தாக்குதலில் 70க்கு மேற்பட்ட படையினர் உயிரிழந்தனர்.

நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள டியோ என்னுமிடத்தில் படையினரின் வாக னத் தொடரணி மீது ஐ.எஸ். அமைப்பினர் தாக்குதல் நடத்தினா. நூற்றுக்கும் மேற் பட்ட படையினர் காயமடைந்தனர்.

5 பேரை ஐ.எஸ். அமைப்பினர் பணயக் கைதிகளாகப் பிடித்துச் சென்றுள்ளனர்.

கடந்த வாரம் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலுக்கு ஐஎஸ் பயங்கரவாத அமைப்பு சனிக்கிழமை பொறுப்பேற்றது.

இது தொடாபாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள படங்களில், ராணுவச் சீருடையுடன குருதிச் சகதிக்குள் 54 படையினரின் சடலங்கள் சிதறிக் கிடக்கும் காட்சி இடம் பெற்றுள்ளது. அத்துடன், படையினரிடமிருந்து பறிக்கப்பட்ட 50க்கும் மேற்பட்ட இயந்திரத் துப்பாக்கிகள், பணயக் கைதிகளாகப் பிடித்துவைக்கப்பட்ட 5 படையினரின் படங்கள் என்பனவும் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

## ஜப்பான், பப்புவாவில் நேற்றிரவு நிலநடுக்கம்

ஜப்பானில் சனிக்கிழமை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது குறித்து ஜப்பான் நிலவியல் ஆய்வு மையமும் அமெரிக்க புவியியல் ஆய்வு மை யமும் தெரிவித்துள்ளதாவது:

ஜப்பானின் 2ஆவது பெரிய தீவான ஹாகைடோவுக்கு அருகே கடல் பகுதியில் இரவு 10.27 மணிக்கு (உள்ளூா நேரம்) சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டா அளவுகோலில் இந்த நிலநடுக்கம் 6.1 அலகுகளாகப் பதி வானது.

இந்த நிலநடுக்கத்தைத் தொடாந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை. புவித் தகடுகள் ஒன்றுடன் ஒன்று உராயும் 'நெருப்பு வளையம்' என்றழைப்படும் பகுதியில் ஜப்பான் அமைந்துள்ளதால் அங்கு நிலநடுக்கங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன.

இதேபோன்று பப்புவா நியூ கினியா தீவிலும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

காண்ட்ரியன் பகுதியில் சனிக்கிழமையன்று இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிச்டா அளவு கோலில் 6.2 அலகுகளாகப் பதிவானது. நிலநடுக்கத்தால் உயிரிழப்புகள் எதுவும் ஏற்பட்டதாக அறிவிக்கப்படவில்லை.

## நேபாளத்தில் அரசியல் குழப்பம் 4 அமைச்சர்கள் பதவி விலகினர்

நேபாள அதிபர் தேர்த லில் போட்டியிடும் எதிர்க்கட்சி யான நேபாள காங்கிரஸின் மூத்த தலைவா ராம் சந்திர பௌடேலுக்கு பிரதமா பிரசண்டாவின் ஆளும் சிபிஎன், மாவோயிஸ்ட் உள்பட 8 கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளதால் அவரது வெற்றி உறுதியாகி உள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரி வித்து ஆளும் கூட்டணியில் உள்ள ஆர்பிபி கட்சியின் நான்கு அமைச்சாகள் பதவி விலகியுள்ளனர். பதவி விலகல் கடிதத்தை பிரதமா பிரசண்டாவிடம் அவாகள் அளித்தனா.

நேபாள அதிபா தோதல் மார்ச் 9ஆம் திகதி நடைபெறு கிறது. இதில், ஆளும் கூட்டணி யில் அங்கம் வகிக்கும் கே.பி. சாமா ஓலியின் கட்சி வேட்பாள ரான சுபாஷ் நெம்பாங்கு, நேபாள காங்கிரஸின் மூத்த தலைவா ராம் சந்திர பௌ டேல் ஆகியோா சனிக்கிழமை வேட்புமனு தாக்கல் செய்தனா.

அதில், ராம் சந்திர பௌ டேலுக்கு பிரதமா பிரசந்தாவின் சிபிஎன், எதிர்க்கட்சியான மாவோயிஸ்ட், ஜனதா சமாஜ வாதி கட்சி, சிபிஎன் (ஐக்கிய சோலிஸ்ட்) உள்பட 8 கட்சிகள் ஆதரவு தெரிவித்திருந்தன. இதனால் அவரது வெற்றி உறுதியாகிவிட்டது. இது அந் நாட்டு அரசியலில் குழப் பத்தை ஏற்படுத்தி உள்ளது.

இது, கடந்த இரண்டு மாதங்களாக நடைபெற்றுவரும் பிரசண்டாவின் 7 கட்சிகளின் கூட்டணி ஆட்சி கவிழும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. சிபிஎன் –யுஎம்எல் கட்சியைச் சோந்த தற்போதைய அதிபா வித்யா தேவி பண்டாரியின் பதவிக் காலம் மார்ச் 12ஆம் திகதி முடிவடைகிறது.

பல்வேறு நெருக்கடிகள் காரணமாக நேபாள காங் கிரஸ் கட்சியின் வேட்பாளா ராம் சந்திர பௌடேலுக்கு பிரதமா பிரசண்டா ஆதரவு தெரிவித்துள்ளா என்று கே.பி. சாமா ஓலி தெரிவித்தார்.



## சீனாவின் அமைதித் திட்டத்தை முற்றாக நிராகரித்தது உக்ரைன்

ரஷ்யாவுடனான போரை முடிவுக் குக் கொண்டு வருவதற்காக சீனா முன்வைத்துள்ள சமாதானத் திட்டத்தை உக்ரைன் நிராகரித்துள்ளது.

இது குறித்து உக்ரைன் அதிபா வொலோதிமீா ஸெலென்ஸ்கியின் ஆலோசகா மிகயீலோ பொடோலி யக் வெளியிட்டுள்ள ட்விற்றர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சீனா தன்னை உலகளவில் தாக் கத்தை ஏற்படுத்தக்கூடிய நாடாகக் கருதினால், நிதாசனத்துக்கு துளியும் பொருந்தாத திட்டங்களை முன்வைக்கக் கூடாது; சாவதேச சட்டங்களை மதிக்காத, இந்தப் போரில் படுதோல்வியடைவிருக்கும் ஒரு நாட்டுக்காக (ரஷ்யா) பரிந்து பேசக்கூடாது.

சீனாவின் சமாதான திட்டத்தில் தொலைநோக்குப் பார்வை இல்லை. போருக்காக பல ஆண்டுகள் திட்டமிட்டவா யாரும் 3 நாள் ஆட்டத்தை ஆட மாட் டார்கள். சமாதானத்துக்கான வாய்ப்பு கால வரையற்றது என்று சீனா கருதக் கூடாது' என்று தனது ட்விற்றர் பதிவில் அவா குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து ஓராண்டு நிறை வடைவதையொட்டி, அந்தப் போா குறித்த தனது நிலைப்பாடு குறித்த அறிக்கையை சீனா வெள்ளிக்கிழமை வெளியிட்டது.

அதில், போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான திட்டங்களை சீனா குறிப்பிட்டிருந்தது.

எனினும், அந்த அறிக்கையில் உக்ரைன் மீது படையெடுத்த ரஷ்யா வுக்கு கண்டனம் தெரிவிக்கப்படவில்லை. அதற்கு பதிலாக ரஷ்யா மீது மேற்கத்தி ய நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளதை சீனா விமாசித்திருந் தது.

இந்த விவகாரத்தில் அனைத்து தரப்பினரும் பொறுமை காக்க வேண்டும்; எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்க்கும் செயலில் ஈடுபடக்கூடாது; நிலைமை மே லும் மோசமாகி, கட்டுப்பாடுத்த முடியாத அளவுக்குச் செல்லும் அளவுக்கு விட்டு விடக்கூடாது என்று அந்த அறிக்கையில் சீனா வலியுறுத்தியிருந்தது.

இந்த நிலையில், சீனாவின் அந்தச் சமாதானத் திட்டத்தை உக்ரைன் அதி பரின் ஆலோசகா நிராகரித்தார்.

## மேற்குலக நாடுகள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றினால் உக்ரைனின் வெற்றி உறுதி

### சொல்கிறார் அந்த நாட்டு அதிபர்

தங்களுக்கு மேற்கத்திய நாடுகள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றினால் உக்ரை னின் வெற்றி தவிர்க்க முடியாதது என்று அந் நாட்டு அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

மேற்கத்திய நட்பு நாடுகள் உக்ரைனுக்கு நிதி சார்ந்தும், ஆயுதங்கள் சார்ந்தும் அவை அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றினால் ரஷ்யாவின் படைகளை நாங்கள் பின்னுக்குத் தள்ளுவோம். எங்களது வெற்றி தவிர்க்க முடியாததாக ஆகும். நாம் சிறப்பாக பணியாற் றினால். வெற்றி நமக்கு நிச்சயம்" என்று செய்தி யாளர்களிடம் தெரிவித்தார் உக்ரைன் அதிபர்.

இதனிடையே, உக்ரைனில் இருந்து ரஷ்ய ராணுவம் உடனடியாக வெளியேறவேண்டும் என்பதை வலியுறுத்தி ஐ.நா. பொது சபையில் தீர்மானம் உக்ரைனால் கொண்டு வரப்பட்டது. 193 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா. பொதுச் சபையில் 141 நாடுகள் இந்த தீர்மா னத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. 7 நாடுகள் எதிராக வாக்களித்தன. இந்தியா, இலங்கை உள்பட 32 நாடுகள் வாக்கெடுப் பில் கலந்துகொள்ளவில்லை.

முன்னதாக, ரஷ்ய அதிபர் புதின், உக்ரைன் – ரஷ்யா இடையேயான போரின் நிலை குறித்து கூறும்போது, உக்ரைன் விவகாரத்தில் அமெ ரிக்காவும், ஐரோப்ப நாடுகளும் ஒத்துழைப்பு அளிக்க மறுத்து வருகின்றன.

இந்தச் சூழலில் நாங்கள் ஒருபோதும் இந்தப் போரை கைவிட மாட்டோம் என்று தெரிவித்தார்.

## ஈரானின் அணு நிலைகள் மீது தாக்க இஸ்ரேல் அரசு திட்டம்

ஈரானின் அணு நிலைகள் மீது தாக்குதல் நடந்த இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகு ஆலோசித்து வருகிறார் என்று கூறப்படுகிறது. இந்த வாரத்தில் ம ட்டும் இஸ்ரேலின் மூத்த படை அதிகாரிகளை நெதன் யாகு ஐந்து முறை சந்தித்திருக்கிறார். இந்தச் சந்திப்பில் ஈரானின் அணு ஆயுதங்கள் மீது தாக்குதல் நடத்து–வது தொடர்பாக ஆலோசிக்கப்பட்ட தாக தகவல்கள் தெரிவிக்கின் றன. ஈரானுக்கும் இஸ்ரேலுக் கும் இடையே பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், இந்தச் சந்திப்பை நெதன்யாகு நடத்தியிருக்கிறார்.

முன்னதாக, இம்மாத தொடக்கத்தில், இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகு, 'இஸ்ரேலின் செல்வந் தர் இயல் ஆஃபரின் டேங்கர் கப்பலானது அரேபிய கடலில் தாக்குதலுக்கு உள்ளான பின் னணியில் ஈரான் இருக்கிறது என குற்றம் சுமத்தியிருந்தார். இதனால் ஈரான் – இஸ்ரேல் இடையே மோதல் வெடித்தது.

இதன் பின்னர் ஜனவரி யில், இஸ்பஹானில் உள்ள ஈரானின் பாதுகாப்பு அமைச் சகத்துக்கு சொந்தமான ராணுவ தளத்தை இலக்காக கொண்டு வான்வழித் தாக்கு தல் நடத்தப்பட்டதாக கூறப் பட்டது. இதனை இஸ்ரேல் நடத்தியதாக ஈரான் குற்றம் சுமத்தியிருந்தது.

இஸ்ரேல் – பாலஸ்தீன் விவகாரத்தில் ஹமாஸ் கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் மறைமுகமாக ஆயுதங்கள் வழங்கி வருவதாக இஸ்ரேல் நீண்ட காலமாகவே குற்றம் சுமத்தி வருவது குறிப்பிடத் தக்கது. இதன் காரணமாகவும் இஸ்ரேல் – ஈரான் இடையே மோதல் போக்கு நிலவுகிறது.

இந்த நிலையிலேயே ஈரான் மீது இஸ்ரேல் தாக்கு தல் நடத்தக்கூடும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. ஈரான் தன்வசம் உள்ள யுரேனியத்தை 84 சதவீதம் செறிவூட்டியிருப் பதாக அண்மையில் ஒப்புக் கொண்டது. அது 90 சதவீதம் யுரேனியத்தைச் செறிவூட்டி விட்டால் அதனால் அணு ஆயுதங்களைத் தயாரிக்க முடியும்.

இதையடுத்தே ஈரானின் அணு நிலைகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு இஸ்ரேல் திட் டமிடுவதாகக் கூறப்படுகின்றது.

# ஸ்பெயின் கால்பந்தாட்ட நட்சத்திரம் செர்ஜியோ ராமோஸ் ஓய்வுபெற்றார்




ஸ்பெயின் தேசிய கால்பந்தாட்ட அணியின் பின்கள வீரர் செர்ஜியோ ராமோஸ் சர்வதேச கால்பந்து போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்துள்ளார்.

ஸ்பெயின் அணியின் புதிய பயிற்சியாளர் லுவிஸ் லா புவன்டே அவரது எதிர்கால திட்டத்தில் தம்மை சேர்க்கவில்லை என்று தன்னிடம் தெரிவித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

பரிஸ் செயின்ட் ஜெர்மைன் (பி.எஸ்.ஜி) அணிக்காக விளையாடிவரும் 36 வயதான ராமோஸ், 2010 உலகக் கிண்ணத்தை வென்றதோடு ஸ்பெயின் அணியுடன் இணைந்து 2008 மற்றும் 2012 ஐரோப்பிய கிண்ணங்களையும் வென்றார்.

அவர் ஸ்பெயின் அணிக்காக கடைசியாக 2021 மார்ச் மாதத்தில் விளையாடியிருந்தார்.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் 37 வயதை எட்டும் ராமோஸ் சமூக ஊடகத்தில் திறந்த கடிதம் ஒன்றை வெளியிட்டு, புதிய பயிற்சியாளர் தம்மை ஓய்வுபெறுமாறு அழுத்தம் கொடுத்ததாக மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

'எமது அன்புக்குரியதும், உற்சாகத்தைத் தருவருதுமான ஸ்பெயின் தேசிய அணிக்கு விடைகொடுக்கும் நேரம் வந்துவிட்டது' என்று தனது கடிதத்தில் ராமோஸ் எழுதியுள்ளார்.

தற்போதைய பயிற்சியாளரிடம் இருந்து எனக்கு அழைப்பு ஒன்று வந்தது. எத்தகைய திறமையை வெளிப்படுத்தும்போதுமோ அல்லது எனது கால்பந்து வாழ்வை நான் எவ்வாறு முன்னெடுத்த போதும் என்னை கருத்தில் கொள்ளப் போவதில்லை என்று அவர் தெரிவித்தார்.

மிக வேதனையுடன் எனது பயணத்தை முடித்துக் கொள்கிறேன்' என்று அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்பெயின் அணிக்காக 180 போட்டிகளில் விளையாடியுள்ள ராமோஸ் அந்த நாட்டுக்காக அதிகப் போட்டிகளில் ஆடிய வீரராகவும் சாதனை படைத்துள்ளார்.

காயத்தால் ஓய்விலிருந்த அவர், அதிலிருந்து மீண்டிருந்த போதும் 2022 கட்டார் உலகக் கிண்ணத்திற்காக தேசிய அணிக்கு அழைக்கப்படவில்லை. உலகக் கிண்ணத்தில் 16 அணிகள் கொண்ட சுற்றில் மொரோக்கோவிடம் தோற்று ஸ்பெயின் வெளியேறியிருந்தது.

ஸ்பெயினின் அடுத்த போட்டிகள் 2024 யூரோ தகுதிகாண் போட்டிகளாக மார்ச் மாதத்தில் நோர்வே மற்றும் ஸ்கொட்லாந்து அணிகளுக்கு எதிராக நடைபெறவுள்ளன.

## முத்தரப்பு தொடரில் விளையாடவுள்ள இலங்கை 19 வயது குழாம் அறிவிப்பு



ஐக்கிய அரபு இராச்சியத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள முத்தரப்பு தொடரில் பங்கேற்கவுள்ள இலங்கை 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணிக்கான முதல் கட்ட குழாத்தை இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இலங்கை, பங்களாதேஸ், ஆப்கானிஸ்தான் ஆகிய 3 நாடுகள் பங்கேற்கும் முத்தரப்பு ஒருநாள் தொடர் மார்ச் 15 ஆம் திகதி முதல் ஏப்ரல் 4 வரை நடைபெறவுள்ளது.

இந்தத் தொடருக்காகப் பெயரிடப்பட்டுள்ள இலங்கை 19 வயதுக்குட்பட்ட முதல் கட்ட அணியில் 26 வீரர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இவர்களில் தெரிவுசெய்யப்படும் இறுதி 15 வீரர்கள் பயிற்சியின் பின்னர் பெயரிடப்படவுள்ளனர். கடந்த ஆண்டு மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்ற இளையோர் உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்ற இலங்கை அணியில் இடம்பிடித்த ட்ரவின் மத்யூ, வொன் டானியல் மற்றும் மல்தருபதி ஆகிய மூவரும் முத்தரப்பு ஒருநாள் தொடருக்கான இந்த முதல் கட்ட குழாத்தில் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




## பெண்கள் ரி-20 உலகக்கிண்ண இறுதியாட்டம் இன்று இரவு

பெண்களுக்கான ரி-20 உலகக் கிண்ண இகிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறுகிறது. கேப்டவுனில் நடைபெறும் இந்தப் போட்டியில் ஆஸ்திரேலிய, தென்னாபிரிக்க அணிகள் மோதுகின்றன.

வெள்ளியன்று இதே மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதியில் இங்கிலாந்தை எதிர்கொண்ட தென்னாபிரிக்க அணி எதிர்பாராத வெற்றியைப் பெற்று இறுதிப் போட்டிக்கு முதல் முறையாகத் தகுதி பெற்றது. இதுவரை நடைபெற்றுள்ள பெண்களுக்கான 19 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர்களில் 15 இல் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற ஆஸ்திரேலிய அணி, 12 முறை வெற்றிக்கிண்ணங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல். 2023 - பயிற்சியை தொடங்கியது ஷிகர் தவான் தலைமையிலான பஞ்சாப்



2023 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடருக்காக அணிகள் தயாராகிவரும் நிலையில், ஏனைய அணிகளை முந்திக்கொண்டு ஷிகர் தவான் தலைமையிலான பஞ்சாப் கிங்ஸ் அணி றேறு பயிற்சியைத் தொடங்கியுள்ளது.

முதல் தடவையாக நடைபெறவுள்ள பெண்களுக்கான ஐ.பி.எல். தொடர் மார்ச் 26 ஆம் திகதி முடிவடைந்தவுடன் நான்கு நாட்கள் இடைவெளியில் ஆண்களுக்கான ஐ.பி.எல். தொடர் ஆரம்பமாகவுள்ளது.

இந்த முறை முதல் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நடப்பு சாம்பியனான குஜராத் டைட்டன்ஸ் அணியை அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் எதிர்கொள்ளவிருக்கிறது. அதேபோல். இரண்டாவது போட்டியில் பஞ்சாப் மற்றும் கொல்கத்தா அணிகள் மோதவுள்ளன. இந்தப் போட்டி மொஹாலியில் நடைபெறவுள்ளது.

ஐ.பி.எல். தொடரில் விளையாடவுள்ள சகல அணிகளும் பயிற்சியை ஆரம்பிப்பதற்கான ஆயத்தங்களிலும் ஆலோசனைகளிலும் ஈடுபட்டுள்ளன. பெரும்பாலான அணிகள் மார்ச் முதல் வாரத்திலிருந்து பயிற்சியை தொடங்க திட்டமிட்டிருந்த சூழலில், பஞ்சாப் அணி முதல் அணியாகப் பயிற்சியை நேற்று ஆரம்பித்துள்ளது.

ஒவ்வொரு தொடருக்கும் அணித் தலைவரை மாற்றும் வழக்கத்தைக் கொண்ட பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு இம்முறை அனுபவ வீரர் ஷிகர் தவான் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். தொடரில் 8 அணிகள் ஆடினாலும் 10 அணிகள் ஆடினாலும் ஆறாவது இடத்தையே பிடிக்கும் வழக்கம் கொண்ட பஞ்சாப் அணி, இம்முறை அதனை மாற்றிக் காட்டும் முனைப்புடன் விளையாடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்காக கடந்த தொடரில் அணியின் தலைவராக விளையாடிய மயங்க் அகர்வாலை விடுவித்துவிட்டு, சென்னை அணிக்காக ஆடிய இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரரான சாம் கரனை 18.5 கோடி கொடுத்து ஏலத்தில் எடுத்துள்ளது பஞ்சாப் அணி. ஒரு வீரருக்காக அதிக தொகையை அணியொன்று ஏலத்தில் கொடுத்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.02.2023 இல் வெளியிடப்பெற்றது.